# செந்தமிழ்

தொகுதி 87 ஜூன் 93 பகுதி 2

காலாண்டு இதழ்

ஆசிரியர் மா. தனுக்கோடிபாண்டியன் பி.ஏ.,பி.எல்.

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

பொறுப்பாசிரியர் : பேராசிரியர் பேரறிஞர்
நா. பாலுசாமி எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பிஎச்.டி.,பி.எட்.

# பொருளடக்கம்


1. சங்ககால அரசின் அமைப்பும் செயல்பாடுகளும் 1

பேரறிஞர் பா. சூரிய நாராயணன்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

2. பிற்காலச் சோழர்களும் வேளாண் மேம்பாட்டுப் பணிகளும் 15

பேரறிஞர் தா. ஈசுவரபிள்ளை

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

3. முப்பாற் புள்ளி — ஒரு விளக்கம் 20

மு. இறைவிழியன் புதுச்சேரி

4. உயர் இரத்த அழுத்தம் — குறைப்பதற்குச் சில வழிமுறைகள் 22

பேரறிஞர் சா. கிருட்டிணமூர்த்தி

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

5. தமிழ் வழக்கு 28

திரு. நாராயணையங்கார்

6. சிந்தனைக்குச் சில குறட்பாக்கள் 33

பேரறிஞர் நா. பாலுசாமி, மதுரை

# சங்ககால அரசின் அமைப்பும் செயல்பாடுகளும்

*பேரறிஞர் பா. சூரியநாராயணன்*

## 1. முன்னுரை ;

சங்க காலத் தமிழ் மக்களுடைய அரசு பழங்கால மக்களுடைய அரசைப் போல, அமைப்பைப் பொறுத்த வரையில் அரச பதவியை மையமாகக் கொண்டிருந்தது; அரச பதவியும் அது ஆற்ற வேண்டிய செயல்பாடுகளை ஆதாரமாகக் கொண்டிருந்தது. எனவே, அரசு என்பதற்கு இலக்கணம் கூறும்போது "ஐவகை மரபின் அரசர் பக்கமும்" என்று தொல்காப்பியரும் "வீரத்தாலும், கொடையினாலும், நீதியினாலும் குடிகளைக் காத்தல் அரசு" என்று பெருந்தலைச் சாத்தனார், கோவூர் கிழார் முதலிய சங்ககாலப் புலவர்களும், "முறை செய்து காப்பாற்றுதலும், பொருள்களை இயற்றி, காத்து, வகுத்தலும் செய்யவல்லது அரசு" என்று வள்ளுவரும் குறிப்பிடு கின்றனர்.

## 2. சங்ககால அரசியல் அமைப்பு :

"மக்கள் யாவரும் சமூக நலன்களை — அதாவது, பொருளி யல் துறையின் பயன்களைக் கூடுதலான அளவில் அடையும் பொருட்டு அவர்களுக்கு உதவி செய்கின்ற ஓர் அமைப்பே அரசு எனப்படும்." பேராசிரியர் இலாசுகி. (Laski)

"அரசு என்பது மனிதனுடைய தேவைகளின் காரணமாகத் தோன்றி, அந்தக் காரணத்தினாலேயே அது நீடித்துத் தொடர்ந்து நிலைபெற்று வருகிறது" (அரிட்டாட்டில்)

"அரசாங்கம் என்பது எவருடைய தூண்டுதலுமின்றியே தானே தோன்றியது. அது மனிதனுக்கும் அவனுடைய குடும்பத்துக்கும் இயல்பானதும் அவனோடு கூடத் தோன்றியதும் ஆகும்" (வில்சன்)

"மனிதன், இயல்பில் ஓர் அரசியல் விலங்கு ஆவான்" (அரிட்டாட்டில்)

சமூகமாக அல்லது கூட்டமாக மக்கள் வாழ்வதற்கு உரிய காரணம் அல்லது நோக்கம், பிறருடைய உதவி அல்லது ஒத்துழைப்பு இல்லாமல் தங்களுடைய வாழ்க்கைக்குரிய சாதனங்களைப் பெறுதல் இயலாது என்பதை அவர்கள் உணர்ந்திருத்தலே ஆகும். இவ்வாறு பயன் என்பதே மக்கள் சமூகமாக வாழும் உணர்வுக்கு ஆதாரமாக இருக்கிறது. இந்தச் சமூக உணர்வே மக்களை அரசியல் வடிவத்தில் அல்லது அரசாக இணையுமாறு செய்கிறது. அரசு என்ற அமைப்பு தோன்றுதற்கு, மக்களிடையே முற்காலத்திலிருந்த உறவுமுறை (kinship) சமய நெறி (Religion) போர்ச்சூழ்நிலை (War) தொழில்களின் வளர்ச்சி (Industry) அதிகாரத்துக்குக் கட்டுப்படவும், அதிகாரத்தைச் செலுத்தவும் மனிதருக்கு இயற்கையாக இருக்கின்ற அரசியல் உணர்வு (Political Consciousness) ஆகிய காரணிகள் உதவி செய்தன என இக்கால அரசியலாசிரியர்கள் கூறுவர். சங்க கால அரசு அரசனுடைய பணிகளை ஆதாரமாக வைத்தே உருவாகிய ஒரு சமூக அமைப்பு என்பதைத் தொல்காப்பியர் பொருளதிகாரம், புறத்திணை இயல் 16-ஆம் சூத்திரத்தில்,

''அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்,
ஐவகை மரபின் அரசர் பக்கமும்,
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்,
மறுவில் செய்தி மூவகைக் காலமும்,
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்,
நால்இரு வழக்கின் தாபதப் பக்கமும்
பால்அறி மரபின் பொருநர்க் கண்ணும்,
அனைநிலை வகையொடு ஆங்கு எழுவகையான்
தொகைநிலை பெற்றது என்மனார் புலவர்''

என்று குறிப்பிடுகிறார். இதற்குப் பொருள் எழுதும்போது நச்சினார்க்கினியர், ஆறுவகைப்பட்ட தொழில்களைச் செய்யும் அந்தணர் வகுப்பும், ஐந்துவகைத் தொழில்களைச் செய்யும் அரசர்வகுப்பும், மற்றும் பல்வகைப் பணிகளைச் செய்யும் வணிகர் வகுப்பும், வேளாளர் வகுப்பும், படைவீரர் வகுப்பும், அறிவர், தவத்தோர் ஆகியோரும் இருந்தனரென்று விளக்குகிறார். சங்க கால அரசு பல்வேறு தொழில்களைச் செய்யும் மக்களடங்கிய பல வகுப்புக்களைக் கொண்ட ஒரு சமூக அமைப்பாக (Social Organisation) இருந்தது என்பது இதனால் தெரிகிறது.

### 3. சங்க கால அரசின் செயல்பாடு :

சங்ககால அரசின் அமைப்பில் பல வகுப்புக்கள் இருந்தமையால், அவ்வகுப்பு ஒவ்வொன்றும் தனது பணிகளைச் செய்யுமாறு, அவை ஒவ்வொன்றையும் பாதுகாத்தலே அரசனுடைய தலையாய கடமையாக இருந்தது. அரசனுடைய ஐந்துவகைப் பணிகளை அல்லது செயல்பாடுகளைக் கூறும் தொல்காப்பியச் சூத்திரப் பகுதிக்குப் பொருள் கூறுகையில், நச்சினார்க்கினியர், அரசர், கல்வி கற்றல், வேள்வி செய்தல், ஈதல், காத்தல், தண்டம் செய்தல் ஆகிய பணிகளைச் செய்தல் வேண்டுமென்று கூறுவர். ''குடிகளைக் காத்தல்'' என்னும் அரசினுடைய பணியைக் காணும்போது, புறநானூற்றுச் செய்யுள் 20-இல் புலவர் குறுங்கோழியூர் கிழார், சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைப் புகழ்ந்து கூறிய செய்திகள் நினைவில் கொள்ளத் தக்கவையாகும்; அரசன் அல்லது ஆளுவோன் அறிவு, அன்பு, இரக்கம் அல்லது கண்ணோட்டம் என்னும் பண்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும்; அவனுடைய ஆட்சியில் அமைதி நிலவுதல் வேண்டுமே தவிர, பூசலும், வெம்மையும் இருத்தல் கூடாது. அவனுடைய மக்கள் பயிர்த் தொழிலுக்குரிய கலப்பையை அறிதல்வேண்டுமே தவிர, போர்த் தொழிலுக்குரிய வில் முதலிய கருவிகளை அறிதல் கூடாது, அவன் தன் பகைவனால் வெல்லப்படாத நாட்டைப் பெற்றிருத்தல் வேண்டும். அவனுடைய ஆட்சி அறமும், நீதியும் சேர்ந்த செங்கோலாட்சியாக இருத்தல் வேண்டும். எந்த மாற்றங்கள் ஏற்பட்டாலும், அதனுடைய ஆட்சி மக்களைக் காப்பாற்றும் பணியில் சிறிதும் நடுக்கம் இருத்தல் கூடாது. இத்தகைய பண்புகளும், செயல்களும் நிறைந்த அரசனை மக்கள் போற்றுவர், அவனுக்கு எத்தகைய தீங்கும் வரலாகாதென்று மக்கள் எண்ணுவர். இத்தகைய நற்பண்புகள் அமைந்த ஆட்சியையே வள்ளுவர் சுருக்கமாக,

> ''முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறைஎன்று வைக்கப் படும்''

என்று கூறுவர். மக்களுடைய உரிமைகளைக் காத்தலே ''முறை செய்த''லாகும். அரசுக்கு ஒரு வலுவான பணியாக இருப்பது நாட்டில் வளம் பெருக்கி வறுமையைப் போக்குதல் என்பது. எக்கால அரசுக்கும் இந்தப் பணி பொருந்துவதாகும். இதை வள்ளுவர்,

"இயற்றலும், ஈட்டலும். காத்தலும், காத்த
வகுத்தலும் வல்லது அரசு" (குறள்.385)

என்று சுட்டிக் காட்டுகிறார். பொருள் வரும் வழிகளை மேன் மேலும் உண்டாக்குதலும், வந்த பொருள்களைச் சேர்த்தலும், அவற்றைக் களவு போகாமல் காத்தலும், காத்த பொருளை மக்களுக்குக் கிடைக்குமாறு ஒரஞ்சாராமல் பகிர்ந்தளித்தலும் ஆகிய கடமைகளை அரசு செய்தல்வேண்டும். சங்க கால அரசில் இக்காலத் தொழில் வகைகளும், அறிவியல் முறைகளும், போக்குவரவுச் சாதனங்களும், செய்தித் தொடர்புகளும் இல்லா விட்டாலும், அக்காலத்தில் தமிழகத்தில் சிறந்து வளர்ந்திருந்த வேளாண்மைத் தொழிலும் நெசவுத் தொழிலும் தோற்றுவித்த பொருள் வளங்கள் யாவருக்கும் கிடைக்குமாறு உதவி செய்வதே அரசின் நோக்கமென்பதும், அதற்கேற்ப அரசு முறை செய்தல் வேண்டுமென்பதும் வள்ளுவர் கூறும் கருத்துக்களாகும். ஆளு வோன் குடிகளைக் காப்பாற்றத் தவறினால், எந்தத் தொழிலாளர் வகுப்பும் செயல்படாதுபோய், குழப்பமும், வறுமையும் ஏற்படும்.

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்"

இந்த உண்மை தனியார் உரிமை முறை நிலவுகின்ற இந்தக் காலத்திலும் ஒப்புக்கொள்ளத் தகும். மனித உரிமைகள் அதாவது உயிர் வாழும் உரிமை, சமய நெறி உரிமை, அரசியல் உரிமைகள், அரசாங்கத்தால் மீறப்படும் போது, அவற்றைத் தகுந்த நீதிமன்றப் பாதுகாப்புடன் (judicial safeguards) காத்துக் கொள்ளும் உரிமை, ஓரளவுக்குச் சொத்து உரிமை முதலியவை ஒவ்வொருவருக்கும் இருத்தல் வேண்டுமென்று பேராசிரியர் இலாசுகி கூறும் உரிமைக்கருத்து, வள்ளுவர் கூறும் ஆட்சியாளருக்கு இருக்கும் உரிமையைக் காத்தல் என்னும் பணியோடு இணைத்துக் காணத் தக்கதாகும். மேலும் குடிமக்களைக் காப்பாற்றுதல் என்னும் ஆதாரப் பொறுப்பினின்றும் தவறிவிட்ட அரசாங்கத்தை மக்கள் தேர்தல் என்னும் குடியாட்சி அல்லது!மக்களாட்சி முறையின் வழியாகப் பதவி நீக்கம் செய்ய உரிமைஉண்டு என்ற இக்கால மக்களாட்சிக் கருத்தும் ஆட்சியாளருடைய காவற் பணியை அல்லது காவற் பொறுப்பை வலியுறுத்துகிறது.

**4. சங்ககால அரசும் இக்கால அரசும் :**

4.1 நோக்கத்தைப் பொறுத்தவரையில் சங்க கால அரசுக்கும் இக்கால அரசுக்கும் வேறுபாடு இல்லை; குடிமக்களைக் காத்தல் என்னும் உயர்ந்த குறிக்கோள் இருவகை அரசுகளிலும் வலியுறுத்தப்பட்டது. பணிகளைப் பொறுத்தவரையில் இரண்டு அரசு முறைக்கும் வேறுபாடு காணப்படுகிறது. சங்க காலத்தில் அரசர் நீதி வழங்குதல் முதலிய சில பணிகளையே செய்து வந்தனர்; காடழித்து வயல்களையும் குளங்களையும் அமைத்து, சோழன் கரிகாலன் போன்றோர் நற்பணிகள் செய்தனர். இக்கால மக்களாட்சி அரசு நீதி வழங்குதல் மட்டுமல்லாமல், வேளாண்மை, கைத்தொழில்கள், போக்குவரவு, செய்தித் தொடர்புகள் முதலிய பல பணிகளைச் சமூக நல வாழ்வுக்காக ஏற்றுச் செய்கின்றது.

4.2 பணிகளைப் பொறுத்து அரசாங்க அமைப்பிலும் வேறுபாடு காணப்படுகிறது. பெருமளவிலே நீதி வழங்கும் பணியையே செய்துவந்த சங்ககால அரசிலே, அரசர், அமைச்சர், சில ஏவலர் ஆகியோரடங்கிய ஒரு சில அமைப்புகளே இருந்தன. சேர, சோழ, பாண்டிய அரசுகளிலே, சமுதாயச் சட்டங்களை விளக்கித் தீர்ப்புச் செய்யும் அதிகாரம், போர்களைத் தொடங்கி நடத்தும் அதிகாரம் முதலிய அதிகாரங்களெல்லாம் அரசரிடமே குவிக்கப் பட்டிருந்தன. அரசர்களுக்கு அறிவுரை கூறும் அமைச்சர்களும், புரோகிதர், சேனாபதி, தூதுவர், சாரணர் முதலிய ஐவகைப் பணியாளர்களடங்கிய ஐம்பெருங்குழு என்ற ஓர் அமைப்பும், கரணத்து இயலவர், கருமகாரர், கனகச் சுற்றம், கடைக் காப்பாளர், நகர மாந்தர், படைத்தலைவர், யானை வீரர், குதிரை மறவர் ஆகிய எட்டுவகை உறுப்பினரடங்கிய எண்பேராயம் எனும் ஓர் அமைப்பும் இருந்தன. ஆனால் இவ்வகை அமைப்புக்களெல்லாம் எல்லா அரசுகளிலும் இருந்தன, என்றோ, அவை அரசனுடைய அதிகாரங்களைக் கட்டுப்படுத்தின என்றோ கூறுதல் இயலாது. அமைச்சர்களுடைய ஆலோசனையை அரசர் ஏற்றே நீதி வழங்குதல் வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. இவ்வாறு சங்ககால அரசருடைய ஆட்சி, அதிகாரக் குவிப்பு உடையதாக இருந்தாலும், அது மக்களுடைய உரிமைகளை அழிக்கவல்ல எதேச்சாதிகாரமான கொடுங் கோலாட்சியாக இல்லை; இத்தகைய ஆட்சியாக மாறாதவாறு தடுக்கும்பொருட்டு அரசனுக்கு நல்ல குறிக்கோள்களையும்

கடமைகளையும் எடுத்துக் கூறும் நற்பணியைத் தமிழ்ப் புலவர்கள் பலர் செய்தனர்.

**4.3** செயல்பாட்டு முறையில் இரு அரசுகளுக்கும் வேறுபாடுகளிருக்கின்றன. சங்க கால அரசில் சுருங்கிய அளவில் அரசாங்கப் பணிகள் இருந்ததை ஒட்டி, அரசாங்க அமைப்பும் சுருங்கி இருந்தது. இக்கால அரசின் வளர்ச்சிப் பணிகள் பெருமளவில் இருப்பதால் அதற்கேற்ப அரசாங்கத் துறைகளும் எண்ணிக்கையில் பெருமளவில் காணப்படுகின்றன. மேலும், இக்காலத்தில் அரசு என்ற அமைப்பைப் பற்றிய சிந்தனையிலும் தாராள இயல்புள்ள கருத்துக்களும், மக்களாட்சிக் கொள்கையும் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. "அரசு என்ற அமைப்பு மனிதநல வாழ்வுக்காக இருக்கும் ஒரு கருவியே தவிர (means) அதுவே மனிதரின் முடிந்த முடிபு (end) அன்று" என்ற அரசு பற்றிய தாராளக் கருத்தை ஜான் லாக், ஆடம் ஸ்மித் ஹெர்பர்ட் ஸ்பென்சர் ஆகிய ஆங்கில சிந்தனையாளர்களும் இம்மானுவல் கான்ட் என்ற செருமானியச் சிந்தனையாளரும் உருவாக்கினர். "மக்களே இறைமை அல்லது தலைமை அதிகாரம் உடையவர்கள். ஆகையால் அவர்களுக்கு நேர்முகமான பங்கு ஆட்சியில் இருத்தல்வேண்டு"மென்ற மக்களாட்சிக் கொள்கையை ரூசோ என்ற பிரெஞ்சு சிந்தனையாளரும், மக்கள் தங்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் வழியாக ஆட்சியில் பங்கு கொள்ளுதல் வேண்டும்" என்ற பிரதி நிதித்துவ மக்களாட்சிக் கொள்கையை ஜான் ஸ்டுவர்ட்மில் என்ற ஆங்கிலச் சிந்தனையாளரும் உருவாக்கினர். இக்கருத்தை ஒட்டியே ஒவ்வொரு மக்களாட்சி அரசிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்றமும் சட்டமன்றத்துக்குப் பொறுப்பான நிருவாக உறுப்பும், இந்த இரு அமைப்புக்களின்றும் தனித்துச் செயல்படும் நீதிமன்றமும் அமைக்கப்பட்டுள்ளன. ஆட்சியாளர்களுடைய செயல்பாடுகளிலுள்ள தவறுகளைச் சுட்டிக் காட்டுதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிமைகளும், ஒவ்வொரு குடிமகனுக்கும் பேச்சு உரிமையும் கருத்துக்களைச் செய்தித்தாள்களில் எழுதி வெளியிடும் உரிமையும், கட்சிகளை அமைத்து அரசாங்கத்தின் செயல்களை இடித்துக் கூறும் உரிமையும் இருக்கின்றன. வயது வந்தோருக்கு, சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும், தேர்தல்களில் வேட்பாளராகப் போட்டியிடும் உரிமையும், அரசாங்கப் பணிகளுக்குரிய கல்வி முதலிய

தகுதிகளைப் பெற்றிருந்தால், அந்தப் பணிகளைப் பெறுதற்குரிய உரிமையும் இருக்கின்றன. இந்த அளவிற்கு இக்கால அரசில் மக்களாட்சி முறை வளர்ந்திருப்பதை நாம் பண்டைத் தமிழக வரலாற்றில் காண இயலாது.

இவ்வாறிருந்தாலும், உள்ளூராட்சி அமைப்பைப் (Local government) பொறுத்தவரையில் சங்க கால அரசிலிருந்த முறைக்கும் இக்கால உள்ளூராட்சி முறைக்கும் வியக்கத்தக்க ஒற்றுமை இருப்பதைக் காணலாம். சங்க கால அரசில் நடுவண அரசிலிருந்ததைப் போல, உள்ளூராட்சியிலும் நீதி வழங்குதலே முக்கியமான பணியாக இருந்தது. தொல்காப்பியம் புறத்திணை இயல் 17-ஆம் சூத்திரத்தில் "எட்டுவகை நுதலிய அவையகத் தாலும்" என்ற பகுதியிலிருந்து, பண்டைத் தமிழ்நாட்டில் பல இடங்களில் அறங்கூறும் அவைகள் இருந்தன என்பது தெரிகிறது.

"மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம்நின்று நிலையிற்று ஆகலின்"

என்ற புறநானூறு 39-ஆம் பாடலும், அகநானூறு 93-ஆம் பாடலும், நற்றிணை 400-ஆம் பாடலும் உறையூரில் அறங்கூறும் அவை ஒன்று இருந்து, அது நடுவுநிலை தவறாமல் நீதி வழங்கிற்று என்று தெரிவிக்கின்றன. மேலும் இந்த அறங்கூறு அவையத்தின் அல்லது மன்றத்தின் உறுப்பினர்களை ஊர்ப் பொதுமக்களடங்கிய சபை (ஊர்ச்சபை) குடவோலை முறையினால் (lot system) தேர்ந்தெடுத்தது என்று அகநானூறு 77-ஆம் பாடலில்,

"கயிறுபிணி குழிசி ஓலை கொண்மார்
பொறிகண்டு அழிக்கும் ஆவண மாக்களின்"

என்ற பாடற்பகுதி குறிப்பிடுகிறது. இந்த மன்றங்களில் குடிப் பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறு இன்மை, அவா இன்மை முதலிய எட்டுவகைக் குணங்களை உடையவர் இருந்தனர். பணிகளுக்குத் தக்கவாறு அவைகளின் எண்ணிக்கைகள் இருந்தன. சங்க காலத்துக்குப் பிற்பட்ட பல்லவர், சோழர், பாண்டியர் காலங்களிலே நீதி வழங்கும் குழு அல்லது அறங்கூறு அவையம், நியாயத்தார் என்று அழைக்கப்பட்டது. மேலும், அவர்களுடைய ஆட்சிக் காலங்களில் ஏரி, குளம், தோட்டம் ஆகியவற்றைப் பாதுகாத்தல்,

அறநிலையங்களைப் பாதுகாத்தல், நிலவரி வாங்குதல் முதலிய பல பணிகள் பெருகவே அவற்றைச் செய்வதற்குக் குடவோலை முறையினால் தெரிந்தெடுத்து அமைக்கப்பட்ட வாரியங்கள் இருந்தன என்று மானூர், உத்தரமேரூர்கல் வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. சங்க காலத்திலிருந்து இயங்கி வந்த, மக்களாட்சி இயல்புடைய உள்ளூராட்சி முறை அல்லது ஊராட்சி முறை பிற்காலத்தில் நடுவண அரசில் பல மாறுதல்கள் ஏற்பட்ட போதிலும், முற்றிலும் அது அழிந்துவிடாமல், கிராமத்திலிருந்த ஒவ்வொரு சாதியாரின் உரிமைகளையும், மற்றவர் மீறாதபடி பாதுகாத்துப் பெருந்தொண்டு செய்த காரணத்தால். கிராம மக்களுக்குப் பழக்கமான பழைய பஞ்சாயத்து முறையை மீண்டும் தோற்றுவித்துப் பயன்படுமாறு செய்தல் வேண்டுமென்று சென்னை மாகாண ஆளுநராக 1820 முதல் 1827 வரை இருந்த சர் தாமஸ் மன்ரோ என்பவர் தமது குறிப்பில் கூறியுள்ளார். மக்களாட்சி இயல்புடனும், ஒத்துழைப்புடனும் கிராமத்திலுள்ள பல்வேறு சமூகங்களும் வாழ்ந்தமையால் இந்திய கிராமங்களை ''சிறு குடியரசுகள்'' (Little Republics) என்று 1835-36-ஆம் ஆண்டுகளில் தலைமை ஆளுநராக இருந்த சர் சார்லஸ் மெட்காப் என்பவர் தமது குறிப்பில் கூறுகிறார். சங்க கால அரசில் மக்களாட்சி இயல்போடு இயங்கிய உள்ளூராட்சி முறை, இங்கிலாந்தின் உட்பிரிவுகளாகிய சயர்கள் (Shires) கவுண்ட்டிகள் (Counties) நூறுகள் (Hundreds) (நூறு குடும்பங்கள் வாழும் சிறிய உட்பிரிவு) ஆகிய ஒவ்வொன்றிலும், மக்களாட்சி அமைப்புக்கள் ஊர்ப் பொதுப்பணிகளைச் செய்து வந்ததை ஒத்திருந்தது. இக்காலத்திலும் சமூக நலப் பணிகளில் பங்கு கொள்ளுகின்ற உள்ளூராட்சி முறை மக்களாட்சி இயல்புடனமைந் திருப்பதைக் காணலாம்.

4. ஆட்சியாளருக்கு இருக்க வேண்டிய தகுதிகள்;

சங்க கால அரசை கிரேக்க நகரரசாகிய ஆதென்சோடு ஒப்பிடுதல் கூடும். குடிப்பிறப்பை ஒட்டியே பெரும்பாலும் ஒழுக்கமும் அறிவும் வளரும் என்று வள்ளுவரும், அரிட்டாட்டிலும் கருதினர். ஆயினும் சிறந்த கல்விப்பயிற்சியின் வழியாக நல்ல நோக்கங்களையும், செயல்முறைகளையும் ஆட்சியாளர்கள் வகுத்துக் கொள்ளலாமென்றும் அவர்கள் கருதினர். கீழ் வகுப்பைச் சேர்ந்தவர்களும், சிறந்த கல்விப் பயிற்சியுடையவராயின் அவர் உயர்குடிப் பிறப்பாளரை ஒத்த மதிப்பைப் பெறுவர்

என்று சங்க நூல்கள் தெரிவிக்கின்றன. பிளேட்டோ, தமது 'இலட்சிய அரசு' (Republic) என்னும் நூலில் நாட்டை ஆளும் காவலர் வகுப்பினருக்கு (guardian Class) கணிதமும், சொல் லாற்றலும், படைப்பியற்சியும் கற்றுக் கொடுக்கப்படுதல் வேண்டு மென்றும், அவர்களுக்கு ஒழுக்கமும், ஆண்மையும், நீதி உணர்வும் உடைய நன்மக்களாக உருவாக்கக்கூடிய இலக்கியங்கள் புகட்டப்படுதல் வேண்டுமென்றும், அறிவை மயக்கி அவர்களைப் புலன்களுக்கு அடிமையாக்கக்கூடிய கீழ்த்தரமான கற்பனை களும், கவிதைகளும், பொய்யும் நிறைந்த புராணங்கள் கற்றுக் கொடுக்கப்படலாகாதென்றும் கூறுகிறார். இதே போல வள்ளு வரும், ஆளுவோருக்குக் கணிதத்திலும், சிறந்த பண்புகளைக் கூறும் நல்ல இலக்கியங்களிலும் சிறந்த பயிற்சி இருத்தல் வேண்டுமென்று கூறுகிறார்.

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு''

மேலும் அவர் திருக்குறள் பொருட்பாலில் அரசியல் என்னும் பகுதியில், ஆட்சியாளருக்கு இருக்கவேண்டிய தகுதிகளையும், இருக்கத்தகாத தீய பண்புகளையும் சுட்டிக்காட்டுகிறார். கல்வி, கேள்வி, அறிவுடைமை, குற்றம் கடிதல், பெரியாரைத் துணைக் கோடல், தெரிந்து செயல்வகை, வலி அறிதல், காலம் அறிதல், இடன் அறிதல், தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல், சுற்றம் தழுவுதல், செங்கோன்மை, கண்ணோட்டம் (இரக்கம்), ஒற்றாடல், ஊக்கம் உடைமை, ஆள்வினை உடைமை ஆகியவை ஒரு நல்லாட்சியாளரிடம் இருக்கவேண்டிய பண்புத் தகுதி களாகும். இதே போல ஓர் ஆட்சியாளரிடம் இருக்கத்தகாத தீய பண்புகளாக, கல்லாமை, சிற்றினம் சேர்தல், மறதி அல்லது சோர்வு (பொச்சாப்பு), கொடுங்கோன்மை, குடிமக்கள் வெருவும் படியான செயல்களைச் செய்தல், மடி முதலியவற்றை வள்ளுவர் சுட்டிக் காட்டுகிறார். ஆட்சியை அரசர், உயர்குடிப்பிரபுக்கள் வகுப்பு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள், ஆகிய இவருள் எவர் நடத்தினாலும், அந்த ஆட்சி சமூக நலனையே நோக்கமாகக் கருதி செயல்படுமாயின், அது தூய்மையான சிறந்த ஆட்சியாகும் என்றும், அது ஆளுவோருடைய நலனுக் காகவே செயல்படுமாயின் அது தூய்மையில்லாத அல்லது சிதைந்த ஆட்சி என்றும் (Corrupt form of government)

அரிட்டாட்டில் ஆட்சி வகைகளைப் பாகுபாடு செய்கிறார். நல்லறிவும், நல்லுணர்வும் நற்செயல்களை உருவாக்குபவை யாகையால், இவற்றை வளர்க்கக்கூடியவையாகக் கல்விப் பயிற்சி அமைந்திருக்கவேண்டும்.

5. நல்ல ஆட்சியை உருவாக்குதலில் சங்க காலத்தில் புலவர்களுக்குப் பெரும்பங்கு இருந்தது. இது அக்கால அரசியலில் குறிப்பிடத்தக்க ஒரு இயல்பு ஆகும். சங்க காலத்தில் ஓர் அரசனுக்கு அல்லது ஆட்சியாளனுக்குப் புகழைத் தருவனவாகக் கருதப்பட்டவை முறையோடு கூடிய அவனுடைய வீரம், நீதி பிறழாத ஆட்சி அல்லது காவல், தக்கார்க்கு ஈகை ஆகிய பண்பு களே ஆகும். ஆளுவோர் பொதுநலனைப் புறக்கணித்து, தம் வளனைப் பெருக்கும் நோக்கத்துடன் செயல்படுவாராயின், குடிமக்களிடையே ஆட்சியாளர் மீது வெறுப்பு வளர்ந்து, அவ் வாட்சியை ஒரு வன்செயற்புரட்சியால் அகற்றிவிடும் இயல்போடு இருப்பார் என்றும், எந்த அரசாங்கத்தையும் மாற்றுவதற்கு ஏற்படும் புரட்சிகளைத் தவிர்ப்பதற்கு உரிய ஒரே வழி, குடி மக்களுக்குத் த்ங்களுக்கு இருக்கின்ற அரசியலமைப்பைப் பற்றி (Constitution) அறிவு உண்டாகும்படி செய்வதே ஆகும் என்றும் அரிட்டாட்டில் கூறுகின்றார். மேலும் கீழ்நிலையிலுள்ளோர் மேல்நிலையாளருக்கு ஒத்த உரிமைகளைப் பெறுதலில் இருக் கின்ற ஆர்வந்தான் புரட்சிகளுக்குக் காரணம் என்றும் அவர் கூறுகிறார். அரிட்டாட்டிலின் இத்தகைய புரட்சி பற்றிய கருத்து சங்க கால அரசியலில் காணப்படவில்லை. அரசன் வீரமும், நீதியும், ஈகையும் உடைய ஆட்சியைச் செயல்படுத்து தல் வேண்டுமென்றுதான் பொதுவாக யாவரும் எண்ணினரே யன்றி, தீய அரசாட்சியைப் புரட்சி வாயிலாக அகற்றுதல் வேண்டுமென்று எவரும் எண்ணியதாகத் தெரியவில்லை, ஆயினும் ஆட்சியாளரின் தவறுகளினால் குடிகளுக்கு ஏற்படக் கூடிய துன்பங்களை நன்கு உணர்ந்த புலவர்கள் அவற்றை அரசர்களுக்குத் துணிவுடன் எடுத்துக் கூறினர். இக்கால மக்க ளாட்சியில் காணப்படுகிற பல உரிமைகளும், ஏதேச்சாதிகாரத் தைத் தடுக்கக்கூடிய பல அமைப்புக்களும் சங்க கால அரசியலில் காணப்படாத போதிலும், அக்கால ஆட்சியாளரின் குற்றங் களையும், தவறுகளையும் எடுத்துக்கூறி அவற்றால், அரசர் அடையும் வசை அல்லது பழியையும் துணிவுடன் புலவர்கள் சுட்டிக்காட்டினர். புலவர்களே நாட்டு மக்களிடையே பழகி,

அவர்கள் ஆட்சியைப் பற்றி என்ன எண்ணுகின்றனரென்று அறியக்கூடிய நிலையில் இருந்தனராதலின் புலவர்களின் பாராட்டுதலைப் பெறும் உயரிய நோக்கத்துடனேயே சங்க கால ஆட்சியாளர்கள் தங்களுடைய வீரம், நீதி, ஈகை ஆகிய பண்பு களை வெளிப்படுத்தும் நற்செயல்களில் ஈடுபட்டிருந்தனர். செருக்கு, சினம், காமம், பொருள் கொடுக்கவேண்டிய இடத்தில் கொடுக்காதிருத்தல், அளவில்லாத மான உணர்ச்சியை வெளிப் படுத்துதல், தமது நிலைக்கு ஒவ்வாத மகிழ்ச்சியோடிருத்தல் தன்னை மிக உயர்வாக எண்ணி, வியந்து மதித்தல், நன்மை தராத செயலை விரும்புதல் ஆகிய குற்றங்களின் வாயிலாக ஆட்சியாளருக்குப் பழி அல்லது வசை வருதல் கூடும். வசையை நீக்குதல் வேண்டுமாயின், ஆட்சியாளர் பழிதரும் செயல்களை நீக்கி, புகழ் தரும் செயல்களைச் செய்யுமாறு அவர்களுக்குப் புலவர்கள் பலர் நல்லுரை கூறினர்.

''வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர்''

ஆகையால் புலவர்களுடைய பாட்டுக்களில் தனது ஆட்சியும், நாடும் புகழப்பெறுதல் வேண்டுமென்று தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் போன்ற சில நல்ல அரசர்கள் விரும்பினர். எந்த ஒரு அரசனையும், அவனுடைய நாட்டையும், புலவர்கள் புகழ்ந்து பாடவில்லையோ, அந்த அரசன் பழிக்கத்தக்க செயல்களைச் செய்தவனாக மக்களால், இகழப்பட்டான், ஆகையால் ஓர் அரசனுடைய ஆட்சி புகழுக் குரிய ஆட்சியா, இல்லையா என்று கூர்த்தறிந்து தமது கருத்துக் களைத் துணிவுடன் கூறும் உரிமையைச் சங்க காலப் புலவர்கள் செயல்படுத்தினர். இதற்குப் பல எடுத்துக்காட்டுக்களைக் காணலாம்.

தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காடு பற்றியிருந்த குமணனைப் பெருந்தலைச்சாத்தனார் கண்டு, அவன் தன் வாள் கொடுப்பக் கொண்டு இளங்குமணனுக்குக் காட்டி இருவருக்கு முள்ள பகையை நீக்கினார்:

''மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறிஇத் தாம் மாய்ந்தனரே.
துன்னரும் சிறப்பில் உயர்ந்த செல்வர்

இன்மையின் இரப்போர்க்கு ஈயாமையின்
தொன்மை மாக்களின் தொடர்பு அறியாரே''

கொடையினால் வரும் புகழே ஒருவற்கு உலகத்தோடு தொடர்பை அளிக்கும். வெளிமான் துஞ்சியபின் அவன் தம்பி இளவெளிமானைப் பரிசில் கொடு என அவன் சிறிது கொடுப்பக் கொள்ளாது, பெருஞ்சித்திரனார், 'உள்ளம் மகிழ வாராத தம் முகம் மாறித் தரப்பட்ட பரிசிலை வேறிடம் செல்ல மாட்டாதவர் கூட விரும்புவர் அல்லர்'' என்று கூறிப் போயினார். இளங் கண்டீரக்கோவும், இளவிச்சிக்கோவும் ஒருங்கியிருந்த வழி அங்கு வந்த பெருந்தலைச்சாத்தனார் இளங்கண்டீரக்கோ மட்டும் தழுவ, விச்சிக்கோ அவரை நோக்கி, 'இவ்வாறு செய்தது என்ன?' என்று வினவ, அவர் அவனிடம் 'பாடுவார்க்கு அடைத்த காரணமாக மழை பொழியும் உமது உயர்ந்த மலையைப் பாடுதலை எம்மவர் நீக்கினர், என்றார்.

சோழன் நலங்கிள்ளி ஆவூரை முற்றுகையிட்டபோது, அக்கோட்டையில் அடைத்திருந்த நெடுங்கிள்ளியை நோக்கிக், கோவூர் கிழார் என்னும் புலவர், ''வலிய குதிரையை உடைய வனே! ஒன்று, நீ உன் கோட்டைக் கதவை அறவழியென்று திறந்துவிட்டு, அதைப் பகைவனிடம் கொடு. அல்லது நீ வீர முடையவனாயின் பகைவரோடு போரிடுதற்குக் கோட்டைக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வா. இவ்வாறு செய்யாமல் நீ கோட்டைக்குள்ளே அடைந்திருத்தல் உன் குடிகள் பசித் துன்பத்தால் வருந்திக் கூக்குரலிடச் செய்யும், இதை எண்ணிப் பார்'' என்று கூறினார்.

உறையூரை முற்றியிருந்த சோழன் நலங்கிள்ளியையும், அடைத்திருந்த நெடுங்கிள்ளியையும் நோக்கிக் கோவூர் கிழார், ''உங்களில் எவனும் சேரனுமல்லன், பாண்டியனுமல்லன், நீவிர் இருவரும் சோழரே; ஆதலால் உங்களில் ஒருவர் தோற்றால், தோற்பவரும் உம் குடியாளரே; இருவரும் வெல்லுதல் இயல்பு மன்று; நும் போர்ச் செய்கை நும் குடிக்குத் தக்கதொன்றன்று, உங்கள் போர் உங்கள் பகைவேந்தர்க்கு உவகையைத் தரும் ஆகையால் இப்போரைத் தவிர்த்தலே நுமக்குத் தக்கது'' என்று அறிவுறுத்திப் போரைத் தடுத்தார்.

சோழன் நலங்கிள்ளியிடத்திலிருந்து உறையூருக்கு வந்த இளந்தத்தனென்னும் புலவனை நெடுங்கிள்ளி ஒற்றுவந்தானென்று அவனைக் கொல்லப் போக கோவூர்க் கிழார் புலவரது உயர்ந்த வாழ்க்கையைக் கூறி, அவனைக் காப்பாற்றினார். கோப்பெருஞ்சோழன் தன்மக்கள்மேல் போர் தொடுத்தபோது, அத்தவறான வழியினின்றும் அவனைப் புல்லாற்றூர் எயிற்றியனார் விலக்கினார். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை சிறுவனென்று இகழ்ந்து, சேர சோழ அரசர்களும் ஏழுவேளிரும் அவனை நீக்க முயன்றபோது, ''நான் அவர்களை எல்லாம் ஒருங்கே அழிக்கத் தவறினால் என்னை என்குடிகள் அழுது கொடியவன் என்று என்னைத் தூற்றுவார்களாக! கல்வியிற் சிறந்த மாங்குடி மருதன் முதலிய புலவர்கள் எனது நாட்டைப் பாடாமல் ஒதுக்கிவிடுவார்களாக!'' என்று சூளுரைத்து. தன் பகைவரை எல்லாம் வென்றான். அப்போது, ''ஒருவனை ஒருவன் கொல்லுதலும், ஒருவனுக்கு ஒருவன் தோற்றலும், புதிதன்று, இந்த உலகத்தின்கண் முன்னே தொன்றுதொட்டு வரும் இயல்பு; பின் எது நாம் இதுவரை கேள்விப்படாதது என்றால், இப்பாண்டிய அரசன் தான் ஒருவனாகவே நின்று இருபெருவேந்தரையும் ஏழுவேளிரையும் தோற்கடித்து அழித்ததுதான்'' என்று இடைக்குன்றூர்கிழார் இப்பாண்டியனுக்கு அவனுடைய வீரத்தால் கிடைத்த புகழைப் பாடுகிறார்.

கபிலர் பாரியின் வண்மையைக் காட்டும் ஓர் அடையாளமாக அவனுடைய பறம்பு மலையைப் "பெரும் பெயர்ப் பறம்பே" என்று விளிக்கின்றார். அந்த மலை அவன் உயிருடனிருந்தபோது அவனைக் காணாதார்க்கும் அவனுடைய புகழ்போல உயர்ந்ததென்று பிறர் கூறக் கேட்கப் பெற்றது; அவன் இல்லாத காலத்து அதே மலை மற்ற் மலை போலக் கண்ணுக்குத் தோன்றுகிறது என்று கூறுகிறார்.

நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னியை, ஊன்பொதி பசுங்குடையார், "நீ பிறருடைய குற்றம் சொல்லுவரது வார்த்தையைத் தெளிவாய்; நீ மனத்தால் ஆராய்ந்து அறுதியிடப்பட்ட கொடுமையை ஒருவனிடத்துக் கண்டால், அதனை நீதி நூற்குத்தக ஆராய்ந்து, அத்தீமைக்குத் தகத் தண்டம் செய்வாய். அவர் வந்து நின்பாதத்தை அடைந்து முன்னே நிற்பாராயின், நீ அவர்களுக்கு அருள் செய்து தண்டமும் தணிவாய்" என்று கூறும் புகழுரையில், ஆட்சியாளர் நீதி வழங்கும்போது அருள்

செய்தற்கும் உரியராதல் வேண்டும் என்பது தெரிகிறது. சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவனும், பாண்டியன் வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதியும் நண்பர்களாக ஒருங்கிருக்கக் கண்ட புலவர் காரிக்கண்ணனார் வீரமும் நீதியும் உடைய அவ்விருவரும் எப்போதும் நண்பராயிருத்தல் வேண்டு மென்றும், அவர் நட்பு அவருக்கு உலகத்தையும் பெற்றுத் தருமென்றும், அதனால் நல்ல கருத்தென்றும் முந்தையோர் கருத்தென்னும் கூறி அவர்களைப் பிரித்தற்கு முயலும் ஏதிலார் சூழ்ச்சிக்கு அவர்கள் ஆளாதல் கூடாது, என்றும் கூறி வாழ்த்தினார். இந்திரர்க்கு உரிய அமிழ்தம் கிடைத்தாலும், அதைத் தனித்து உண்ணாமல் யாவருடனும் பகிர்ந்து கொள்ளும் நற்பண்பும், எவரையும் வெறுக்காத உள்ளமும், வரும் துன்பத்தை அஞ்சாமல் நீக்கும்திறமும், புகழ் பெறுதற்காக உயிரையும் ஈயும் மனஉறுதியும் ஒரு பழிச்செயலினால் உலகத்தையே பெறுவ தாயினும் அதனைச் செய்யாது விடுக்கும் தெளிவும் உடைய நன்மக்கள் இருப்பதனால்தான் உல்கம் அழியாமல் நடைபெறு கின்றது என்று கடலுள்மாய்ந்த இளம்பெருவழுதி கூறுவார்.

அறிவுடைய அரசன் இறை அல்லது வரிப்பொருளை குடிகளிடமிருந்து கொள்ளும் நெறியை அறிந்து, அதைக் கொண்டால் அவன் நாடு கோடிப் பொருளை அவனுக்கு ஈட்டிக் கொடுத்துத் தானும் தழைக்கும் என்று புலவர் பிசிராந்தையார் கூறினார். இன்னும் பல புலவர்கள் இதே போல அரசனுக்குரிய புகழ் தரும் நற்கருத்துக்களையும் நற்செயல்களையும் கூறி யுள்ளனர்.

5. முடிவுரை:

சங்க கால அரசின் இயல்பையும், அமைப்பையும், செயல் பாட்டையும் நாம் சங்க இலக்கியங்கள் வாயிலாகக் காணும் போது, அக்கால அரசுக்கும், இக்கால மக்களாட்சி அரசுக்கு மிடையே சில ஒற்றுமைகளும், பல வேறுபாடுகளும் இருந்தன என்றும், இக்கால மக்களாட்சியினின்றும், சங்க கால மன்னராட்சி பலவகையிலும் வேறுபட்டிருந்தாலும், ஆட்சி என்பது சான்றோருடைய பாராட்டுதலுக்கும், புகழ்ச்சிக்குமுரிய நற்செயல் களைச் செய்தல் வேண்டுமென்ற உயர்ந்த குறிக்கோளினைப் பின்பற்றினால்தான் அது வரலாற்றில் இடம்பெறுதல் இயலு மென்றும் ஒரு சிறந்த அரசியல் பண்பாட்டை சங்க காலத்தவர் உருவாக்கினரென்றும் நாம் அறியலாம்.

# பிற்காலச் சோழர்களும் வேளாண் மேம்பாட்டுப் பணிகளும்

பேரறிஞர் தா. ஈசுவரபிள்ளை

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி அச்சமுதாயத்தின் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றது. பொருளாதார மேம்பாட்டுக்கு உறுதுணை புரியும் காரணிகளுள் தொழில்களும் அடங்கும். ஒரு நாட்டின் தொழில்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கது வேளாண்மை ஆகும். இத்தொழில் மக்களுக்கு உணவை அளிப்பதுடன், பிற தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களையும் உள்நாட்டு வெளிநாட்டு வாணிபத்திற்குரிய பொருள்களையும் அளிப்பதால் இது ஒரு நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகக் கருதப்பெறுகின்றது. இத்தகைய சிறப்புமிக்க வேளாண் தொழில் மேம்பாடு அடைவதற்காகப் பிற்காலச் சோழ மன்னர்களாலும் மற்றவர்களாலும் மேற்கொள்ளப்பட்ட அரும்பணிகள் பற்றி இவண் காணலாம்.

### அணை கட்டல்

பருவ காலங்களில் மேகங்கள் பொழியும் மழை நீர் வீணாகச் சென்று கடலில் கலப்பதைத் தடுக்கவும், வேளாண்மைக்கு வேண்டிய நீரைச் சேமித்து வைக்கவும் பயன்படும் வகையில் அணைகள் கட்டுதல் இன்றியமையாத பணியாகும். இதனை மனத்திற்கொண்டு சோழ மன்னர்களும் இவ்வரும் பணியில் ஈடுபட்டுள்ளனர். சான்றாக, வீரராசேந்திர சோழனால் திருவரங்கத்திற்குக் கிழக்கே பத்துமைல் தூரத்தில் கோயிலுக்கு அண்மையில் பேரணை அமைக்கப்பட்டமையைக் கூறலாம்.

### ஏரிகள் அமைத்தல் :

பிற்காலச் சோழர் பற்றிய கல்வெட்டுக்கள் வேளாண்மைக்குத் தேவையான நீரை வழங்கும் ஏரிகள் பல சோழமன்னர்களால் அமைக்கப்பட்ட செய்தியைப் பதிவு செய்துள்ளன. திருவரங்காட்டுச் செப்பேடு முதல் இராசேந்திர சோழன் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அருகில் குடிநீர்ப் பஞ்சத்தைப்

போக்கவும், உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யவும் சோழ கங்கம் என்ற ஏரியை வெட்டுவித்தமையைக் காட்டும். முதற் பராந்தக சோழன் வீர நாராயண ஏரியையும் சோழவாரிதி என்ற ஏரியையும் அமைத்துள்ளான். கண்டராதித்த சோழன் கண்டராதித்தப் பேரேரியை வெட்டுவித்துள்ளான். சுந்தரசோழன் காலத்தில் மதுராந்தகப் பேரேரி குந்தவைப் பேரேரி என்பனவும் பஞ்ச காலத்தில் பஞ்சந்தாங்கி ஏரியும் வெட்டப்பட்டுள்ளன.

மன்னர்கள் மட்டுமன்றி, அரசியல் அதிகாரிகளும் தனிமனிதர்களும் ஏரிகள் பல வெட்டுவித்துள்ளனர். பராந்தகனின் அரசியல் அதிகாரிகளுள் ஒருவனாகிய அருள் நிதி கலியன் கலியனேரி அமைத்தமையையும், நக்கன் என்ற சிவனடியார் பழவூர் நக்கப் புத்தேரி அமைத்தமையையும் சான்றுகளாகக் கூறலாம்.

### ஏரிகளைப் பராமரித்தல்

ஏரிகள் வெட்டியதுடன் அமையாது, அவற்றைப் பாதுகாப்பதும் தலையாய கடமை ஆகும். பிற்காலச் சோழர் இதற்காக ஏரிவாரியம் நிறுவி ஏரிகளைப் பேணி வந்தனர். அதற்குரிய செலவு ஏரி ஆயம் மூலம் ஈடுகட்டப்பட்டது. முதலாம் இராசராசன் காலத்தில் வாகூர் ஏரியை ஆண்டுதோறும் ஆழப்படுத்தவும், கரைகளை உயர்த்தவும் அவ்வேரி நீரைப் பெற்றுப் பயனடையும் நிலங்களுக்கு, மா ஒன்றுக்குப் பதக்கு நெல் வீதம் ஆயம் வசூலிக்கப்பட்டது. கன்னாதேவன் கல்வெட்டு, வாகூரில் வாழும் தீண்டத்தகாதவரெனக் கருதப் பெற்றவர்கள் தவிர ஏனையோர்களில் பத்து வயதுக்கு மேற்பட்டவர் முதல் எண்பது வயதுக்கு உட்பட்டோர் வரை, ஆண்டுதோறும் எட்டுச்சாண் நீளம், எட்டுச்சாண் ஆழம் கொண்ட ஒரு குழி அளவுள்ள மண்ணை அப்புறப்படுத்தி ஏரியை ஆழப்படுத்த வேண்டும் என ஆணையிடப்பட்டதைக் கூறுகிறது. தவறினால், நான்கு பொன் தண்டம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

### ஆறுகள் அமைத்தல்

வேளாண்மைக்குப் பயன்படும் வகையில் ஆறுகளும், கிளை ஆறுகளும் அமைக்கப்பட்டன. உய்யக்கொண்டான், கீர்த்திமான், வீரசோழன், விக்கிரமன், வடவாறு, வீரசோழ வடவாறு, மதுராந்தக வடவாறு, முடிகொண்ட சோழப்பேராறு என்பன

பிற்காலச் சோழமன்னர்களால் வெட்டுவிக்கப்பட்ட ஆறுகள் ஆகும். இரண்டாம் இராசராசன் ஆட்சிக் காலத்தில் மலைய மலையின் பக்கத்தில் காவிரியாற்றின் போக்கு தடைப்பட்டு. கிழக்கு நோக்கித் தண்ணீர்வராமல் அடைபட்டதும், இரண்டாம் இராசராசன் அம்மலையின் நடுப்பகுதியை உடைத்து, காவிரிக்கு வழிகண்டு சோழ நாட்டுக்கு என்றும் நீர்வாத்து மிகும்படி செய்தமையை இலக்கியக் குறிப்புக்கள் மூலம் உணரமுடிகின்றது. (தக்க. 549, இ.சோ.உ. 169-170, தொல். புறத். 36. நச். மேற்கோள்).

வாய்க்கால்கள் அமைத்தல்

அணைகள், ஏரிகள், ஆறுகள், குளங்கள் ஆகியவற்றின் நீரை விளை நிலங்களுக்குக் கொண்டு செல்லும் பணியை வாய்க்கால்கள் செய்கின்றன. எனவே, சோழ மன்னர்கள் வாய்க்கால்கள் அமைக்கும் அரும்பணியிலும் ஈடுப்பட்டுள்ளனர். இராசராசன் கீரக்கலூரில் இராசராசன் வாய்க்காலை வெட்டியுள்ளான். (இரா. நாகசாமி, பண்டைய தமிழகத்தில் கிணறுகளின் பங்கு, த.வ.கருத்தரங்கு, ப.2).

நிலங்களைத் திருத்துதல்

மக்கள் தொகையின் பெருக்கத்தால் ஏற்படும் உணவுப் பிரச்சினையைச் சமாளிக்கவும், நாட்டின் வருவாயை அதிகரிக்கச் செய்யவும், ஏற்றுமதியின் அளவை உயர்த்தவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அரசின் கடமை ஆகும். ஒரே நிலத்தில் மீண்டும் மீண்டும் பயிரிடும் போது உற்பத்தி அளவு குறைவு படும். எனவே, பல புதிய நிலங்களைப் பண்படுத்தி, வேளாண் உற்பத்தியில் ஈடுபடுத்தல் தேவை ஆகும். சோழ மன்னர்கள் இப்பணியிலும் சிறந்து விளங்கினர். சேக்கிழார்பெருமான் சோழ நாட்டைத் "திருத்திய சீர் புனல் நாடு" எனல் சுட்டத்தக்க தாகும். (திருஞான. 625 2). பார்த்திவேந்திராதி தரிசனம், காவேரிப் பாக்கம் என்னும் அவனிநாராயணச் சதுர்வேதிமங்கல ஊர்ச்சபையோரிடத்து, அவ்வூர்க் கோவில் பாதுகாப்பாளரில் ஒருவனான மாகண்ட நன்பெருமாள் என்பார் திருக்காபுரம் இறைவனின் அர்ச்சனா போகத்துக்குரிய தோட்டமும் வயலும் ஆற்றுமணலால் நிரப்பப் பெற்றுக் கிடக்கின்றமையை விண்ணப்பம் செய்தமையையும், சபையோர் அதனைக் களரி வாரியத்துக்குத் தெரியப்படுத்தியமையையும், அந்நிலத்துடன்

புறம்போக்கு நிலத்தையும் சேர்த்து 1400 குழி பரப்பு ஆக்கியமையையும் காட்டுவதாகக் கூறுவர். இவற்றால் புதிய நிலங்கள் திருத்தப்பெறல், பழைய நிலங்கள் பண்படுத்தப்பெறல் போன்றவை பற்றி அறியலாம். மேலும், தரிசு நிலங்கள் தானமாகக் கொடுக்கப்பெற்றமை மூலம் அவை வேளாண் நிலங்களாகப் பண்படுத்தப்பெற்றன என்பதும் சுட்டுதற்குரியதாகும்.

மரம் நடுதல்

வேளாண்மைக்குத் தேவையான மழை பெறுவதற்கும், துணைத்தொழில்கள் பல நடைபெறுவதற்கும், இயற்கை உரங்கள் பெறுவதற்கும் மரங்கள் அடிப்படையாய் விளங்குகின்றன. எனவே, இக்காலத்தில் தனித்துறை ஒன்று அரசால் உருவாக்கப்பெற்று, ''மரம் வளர்ப்போம், வளம் காப்போம்'' ''ஒரு குடும்பம், ஒரு மரம்;'; ''வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்'' போன்ற விளம்பரங்கள் மூலமும், சமூகக் காடு வளர்ப்பு, சாலை ஓரக் காடு வளர்ப்பு போன்ற திட்டங்கள் மூலமும் மரங்கள் வளர்க்க ஊக்கம் அளிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு மரம் வளர்ப்பதன் இன்றியமையாமையைச் சோழ மன்னர்களும் மக்களும் அறிந்து செயல்படுத்தியுள்ளனர் எனலாம். திருக்காளத்திக் கல்வெட்டு மூலம் திருக்கண்ணப்பதேவர் பெயரால் கமுகந்தோப்பு வைப்பதற்கு நிலம் கொடுக்கப்பெற்றமையை அறியலாம். அப்பூதியடிகள் நாவுக்கரசர் பெயரால் சாலை ஓரங்களில் நிழல் தரும் மரங்களை அமைத்துள்ளார் (திருநாவுக். 201:1). பிரம்மதேய ஊர்களும், பள்ளிச்சந்தங்களும் அமைக்கப்பெற்றபோது இருவாட்சி, செண்பகம், செங்கழுநீர், மாபலா, கமுகு போன்ற பொருளதார வளம் மரங்கள் நடப்பட்டமையை அறியமுடிகின்றது.

மேட்டிடங்கள் நிறுவுதல்

நன்செய்ப்பயிர் செய்யும் இடங்களுக்கிடையில் புன்செய்ப் பயிர் செய்யவும், பயிர்களைப் பாதுகாப்போர் தங்கவும், விலங்குகள் தங்கவும், விளைபொருட்களைச் சேமித்து வைக்கவும் உதவுகின்றவகையில் விளை நிலங்களின் பக்கத்தில் மேட்டிடங்கள் நிறுவப் பெற்றிருந்தன.

வரிவிலக்கு அவித்தல்

வேளாண்பொருள் உற்பத்தியை ஊக்கப்படுத்தவும், மக்கள் மனம் உவந்து வேளாண் அபிவிருத்திப் பணிகளை ஏற்கவும்

மன்னர்கள் சில வரி விலக்குகளை அளித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

பயிர்ப் பாதுகாப்பு

வேளாண்பொருள் உற்பத்தியுடன் தொடர்புடைய மேய்ச்சல் நிலங்கள், ஏரிகள், குளங்கள், ஆறுகள் ஆகியனவற்றிற்கும் வேளாண் நிலங்களுக்கும் தங்கு தடை ஏற்படின் உற்பத்தி வீழ்ச்சியடையும். எனவே இவற்றைக் காப்பது அரசன் கடமை ஆகும். குலோத்துங்க சோழச் சதுர்வேதி மங்கலச் சபையார் ஆடு, மாடுகளை மேய்ப்பதற்குரிய நிலங்களை வயல்களாக்கத் தடை செய்துள்ளனர். வயல்களில் மேயும் ஆடு, மாடுகளைப் பிடித்துக் கொட்டிலில் அடைக்க வேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளனர். தசரதன் நாட்டு மக்களைக் காக்கும் செயலைத் தரித்திரன் களனியைக் காக்கும் செயலுடன் ஒப்புமைப் படுத்துகிறார் கம்பர். (கம்ப.பால. 4:12:3-4) இதனால் நிலத்தைப் பயிர்வோன் கண்ணும் கருத்துமாய்க் காத்தமை புலப்படும். பயிர்களை நாசம் செய்யும் பூச்சிகள் பற்றியும் பிற காரணிகள் பற்றியும் அறிந்துள்ளனர். பயிர்களுக்குக் கேடு விளைவிப்பனவாக விட்டில், கிளி, நால்வாய், வேற்றரசு, தன்னரசு, நட்டம் பெரும்பெயல், கால் என்பன சுட்டப்படுகின்றன. (சிந்தா.64:1, நச். உரை) திருக்குறள் (732-க்கு உரையெழுதும் பரிமேலழகர் ''கேடாவது மிக்க பெயல், பெயலின்மை, எலி, வீட்டில், கிளி என்பனவற்றின் வருவது'' என்கிறார். வடநூலார் இவற்றை ஈதிகள் என்பர்.

உரமிடல்

இழந்த மண்வளத்தைத் திரும்பப் பெறவும், பயிருக்குத் தேவையான வளத்தைக் கொடுக்கவும் உற்பத்தியைப் பெருக்கவும் உரமிடுதல் என்பது இன்றியமையாது வேண்டப்படுவது ஆகும். வள்ளுவரும், ''ஏரினும் நன்றால் எருவிடல்'' என்கின்றார். சேனாவரையர் ''பைங்கூழ்'' என்பதற்கு எருப்பெய்து, இளங்களை கட்டு, நீர் கால் யாத்தமையின் பைங்கூழ் என்றாயிற்று என்கின்றமை (தொல்.சொல்.21) சுட்டுதற்குரியதாகும்.

இவ்வாறு நாட்டின் அடிப்படைத் தொழிலாகவும், பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும் திகழும் உழவுத்தொழில் பிற்காலச் சோழர்காலச் சமுதாயத்தில் நன்கு மேற்கொள்ளப்பட்டமையுடன், இக்கால வேளாண் அறிவியல் வல்லுநர்களால் பரிந்துரைக்கப்பெறும் வழிமுறைகளையும் திறம்படச் செயலாற்றியமையையும் அறியலாம்.

# முப்பாற் புள்ளி—ஒரு விளக்கம்

—மு. இறைவிழியன்

'செந்தமிழ்' காலாண்டிதழ் — தொகுதி — 86, பகுதி—3 செப்டம்பர் 92 இதழில் மீண்டும் வெளியிடப்பட்ட மு. இராக வையங்காரின் "தொல்காப்பியனாரும் புள்ளியெழுத்துக்களும்" (1927 இல் செந்தமிழில் வெளியானது) கட்டுரையில் 'முப்பாற் புள்ளி' பற்றிய விளக்கத்தில் 'முப்பாற் புள்ளியும்' எனும் தொடர் 'குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் ஆகிய புள்ளிபெறும் மூன்றெழுத்தும்' எனப் பொருள் கொண்டு கூறப்பட்ட கருத்துக் களைப் படித்த பொழுது எழுந்த ஐயங்களைக் கீழே தொகுத் துள்ளேன்.

1. "தொல்காப்பிய நூன்மரபின் நூற்பா 2-இல் அவைதாம்
   குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற
   முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன"

'அவைதாம்' என்பது நூற்பா 1–இல் வரும் சார்ந்து வால் மரபின் மூன்றை'க் குறிக்கும். எனவே ஒரே நூற்பாவில் மீண்டும் ஒரு முறை முப்பாற் புள்ளி' என்ற தொடர்வழி சார்ந்து வால் மரபின் மூன்றினைக் குறித்துள்ளார் ஆசிரியர் எனக் கொள்ளல் பொருத்த மாகுமா?

2. நூற்பாக்கள் :

3. "அவற்றுள்
   அ இ உ
   எ ஒ வென்னும் அப்பால் ஐந்தும்
   ஓ ர ள பிசைக்குங் குற்றெழுத் தென்ப"

4. "ஆ ஈ ஊ ஏ ஐ
   ஓ ஔ என்னும் அப்பால் ஏழும்
   ஈ ர ள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப"

19. "வல்லெழுத் தென்ப கசட தபற"
20. "மெல்லெழுத் தென்ப ஙஞண நமன"
21. "இடையெழுத் தென்ப யரல வழள"

3,4,19,20,21 ஆகிய ஐந்து நூற்பாக்களிலும் உயிர், மெய் எழுத்துக்களின் வரி வடிவங்களைச் சுட்டிய ஆசிரியர் ஆய்த எழுத்தின் வடிவத்தை எங்கும் குறிப்பிடவில்லை. அதனால் இடம் உண்டான போது 'ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும்' என்று அதன் வரிவத்தைக் கூறியுள்ளார் எனக் கோடல் பொருத்த மாகாதா?

3. நூற்பா. 105

''அவற்றுள்
மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்''
நூற்பா. 106
''குற்றிய லுகரமும் அற்றென மொழிப''

இங்கு ஆசிரியர் மெய்யீற்றைப் போலக் குற்றியலுகரமும் புள்ளி பெறும் எனக் குறிப்பிடுகிறார். 'முப்பாற் புள்ளியும், என்பதால் முன்பே ஒரு புள்ளி பெறுவதாகக் கொண்டால் இந் நூற்பா கூறியது கூறல் ஆகாதா? அல்லது குற்றியலுகரம் இரண்டு புள்ளி பெறுமா?

4. குற்றியலிகரம் புள்ளி பெறும் என்பதற்குச் சான்று நூலில் எந் நூற்பாவிலும் காணப்படவில்லையே!

5. நூற்பாக்கள்

38. 'குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி'
324. 'முன்னுயிர் வருமிடத் தாய்தப் புள்ளி'
391. நிற்றல் வேண்டும் ஆய்தப் புள்ளி'

இவ்வாறு ஆய்தத்தைப் 'புள்ளி' என விதந்து குறிப்பிடும் ஆசிரியர் குற்றியலிகரத்தையோ குற்றியலுகரத்தையோ 'புள்ளி' எனக் குறிப்பிடவில்லையே!

6. பால் என்பதற்குப் பிரிவு அல்லது பகுப்பு என்றே பொருள் காணப்படுகிறது. எனவே 'முப்பாற் புள்ளி' என்னும் தொடர் மூன்று 'பிரிவாகிய புள்ளி' மூன்று பகுதியாகிய புள்ளி' என்னும் பொருள் தருமே ஒழிய 'மூன்று புள்ளி பெறும் எழுத்துக்கள்' எனப் பொருள் தருமா?

மேற்கண்ட ஐயவினாக்களால் 'முப்பாற் புள்ளி' என்பது ஆய்தத்தின் வரிவடிவத்தைத் தான் குறிப்பிடுவதாக இருக்க வேண்டும் என்றே என் சிற்றறிவுக்குப் புலப்படுகின்றது.

# உயர் இரத்த அழுத்தம் குறைப்பதற்குச் சிலவழி முறைகள்

பேரறிஞர் சா. கிருட்டிணமூர்த்தி

எந்தவித அறிகுறிகளும் வெளிப்படத் தெரியாமல் உள்ளிருந்து அமைதியாகக் கொல்வது உயர் இரத்த அழுத்தம் என்னும் நோய். இதற்குரிய காரணங்களை முழுமையாக அறிந்து கொள்ள முடியவில்லை என்றாலும், சிகிச்சை முறைகள் நவீன மாக்கப்பட்டுள்ளன.

## உயர் இரத்த அழுத்தம்

உயர் இரத்த அழுத்தம் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், சூழல்நெருக்கம் (Stress) அவற்றுள் முக்கியமான தாகும். அமெரிக்காவில் நான்கு பேர்களுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் இந்நோயுடையவர் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளனர். இருப்பினும் திறன் வாய்ந்த சிகிச்சை முறைகளால் இந்நோய் இப்பொழுது அங்குக் குறைந்து வருகின்றது. பெரும்பாலும் தாங்கமுடியாத நெஞ்சு வலி, நெஞ்சடைப்பு, சிறுநீரகச் செயலிழப்பு போன்றவை ஏற்படுகின்ற வரையில் எந்த வித அறி குறிகளையும் இந்நோய் வெளிக்காட்டுவதில்லை எவ்வாறிருப் பினும் பெருகிவரும் பல்வகை நோய்களுள் மருத்துவரால் மட்டும் குணப்படுத்தப்படும் நோயாக இது இல்லை. நோயாளியும், இந்நோயைக் குணப்படுத்துவதில் பங்கு வகிக்க வேண்டும். இரத்த அழுத்தத்தைப் பாதிக்கும் அன்றாட வாழ்க்கை முறையில் தேவையான மாறுதல்களைச் செய்து கொள்வதன் மூலம் இந் நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

## இரத்த அழுத்த அளவு

ஒருவருடைய இயல்பான இரத்த அழுத்த அளவு 120/80 என்று கணக்கிடப்படுகின்றது. அதற்கென்று உருவாக்கப்பட்ட இரத்த அழுத்தமானி (Sphygmomanometer) யால் இவ் அளவு அளவிடப்படுகின்றது. முன்னுள்ள அளவு இதயத்திலிருந்து இரத்தம் வெளியேறும் அழுத்தத்தைக் குறிப்பது வெளியேறு

இரத்த அழுத்தம் (Systolic Pressure). பின்னுள்ளது இதயத்தின் உள்நுழையும் இரத்த அழுத்தத்தைக் குறிப்பது; உள்நுழை இரத்த அழுத்தம் (Diastolic Pressure). இயல்பான இரத்த அழுத்த அளவைப் பற்றிய பல்வேறு கருத்துகள் அறிவியலறிஞர் களிடையே காணப்பட்டாலும் மேற்கண்ட 120/80 என்ற அளவையே இயல்பான அளவாகப் பெரும்பாலோர் ஏற்றுக் கொள்கின்றனர். இவ் அளவுகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களை வைத்து இரத்த அழுத்தத்தில் தன்மை மதிப்பிடப்படுகின்றது.

1. வரம்புடை உயர் இரத்த அழுத்தம் (Borderline high Blood Pressure) உள்நுழை இரத்த அழுத்தம் 85 இலிருந்து 89க்கு இடைப்பட்ட அளவைக் குறிப்பது.

2. குறைவான உயர் இரத்த அழுத்தம் (Mild high Blood Pressure): உள்நுழை இரத்த அழுத்தம் 90க்கும் 104க்கும் இடைப்பட்ட அளவு.

3. நடுத்தர உயர் இரத்த அழுத்தம் (Moderate high Blood Pressure): 105க்கும் 114க்கும் இடைப்பட்ட உள்நுழை இரத்த அழுத்தம்.

4. அதிக உயர் இரத்த அழுத்தம் (Severe hige Blood Pressure): 115க்கும் மேற்பட்ட அளவுடைய உள்நுழை இரத்த அழுத்தத்தைக் குறிப்பது.

5. வரம்பில் உயர் இரத்த அழுத்தம் (Isolated high Blood Pressure) : வெளியேறு இரத்த அழுத்தம் 160க்கு மேற் பட்டும் உள்நுழை இரத்த அழுத்தம் 90க்கும் குறைந்தும் இருப்பது.

### ஏற்ற இறக்கக் காரணங்கள்

உயர் இரத்த அழுத்தத்தில் காணப்படும் ஏற்ற இறக்கங் களுக்கும், வேறுபாடுகளுக்கும் பல காரணங்கள் உள்ளன.

1. கடுமையான உடல் உழைப்பு: இது இரத்த அழுத்தத்தில் ஏற்ற இறக்கத்தை ஏற்படுத்துகின்றது. சாதாரணமாக ஒருவருக்குக் காலை நேரத்தில் கூடுதலாகவும் நண்பகலில் குறைவாகவும், தூக்க நேரத்தில் மிகக் குறைந்தும் காணப் படும். 140/80-ஐ காலை நேர அளவாகவும் 50/20-ஐ இரவு நேர அளவாகவும் கொள்வர்.

2. உடலிருப்பு நிலை (Posture) ஒருவருடைய உடலின் இருப்பு நிலையைப் பொறுத்தும் இரத்த அழுத்தம் மாறுதல் அடையும். அதிக நேரம் உட்கார்ந்திருக்கும் பொழுதும், நிற்கும் பொழுதும் இரத்த அழுத்த அளவு குறையும்.

3. வயது : பருவ மகளிருக்கு இரத்த அழுத்த அளவு மிகக் குறைந்தே இருக்கும் (80/50). இந்த அளவே அவர்கள் வயதிற்கு இயல்பான அளவாகக் கருதப்படுகின்றது. வெளியேறு இரத்த அழுத்த அளவு மாறுபடும் தன்மையுடையது. வயது கூடும் பொழுது அதுவும் கூடும். ஆனால் உள்நுழை இரத்த அழுத்தம் வயதிற்கேற்ப மாறுபடாது.

4. உடற்பயிற்சி : உடற்பயிற்சி உள்நுழை இரத்த அழுத்த அளவைக் குறைத்து, வெளியேறு இரத்த அழுத்த அளவை அதிகரிக்கச் செய்யும்.

5. உடலுறவு : வெளியேறு இரத்த அழுத்த அளவு உடலுறவுக் காலங்களில் 200 வரை அதிகரிக்கும்.

6. பால் வேறுபாடு : பால் வேறுபாடும் இரத்த அழுத்த அளவில் வேறுபாட்டைக் காட்டும். பெண்பாலாரை விட ஆண்பாலாருக்கு அதிகமாகவே இருக்கும்.

7. குழந்தைப் பேறு : இயல்பான குழந்தைப் பேறு காலத்தில் இரத்த அழுத்த அளவு குறைந்து காட்டும்; அதிகரித்துக் காட்டுவது வேறு விளைவுகளைத் தரும்.

இவ்வாறு இரத்த அழுத்த அளவில் ஏற்படும் வேறுபாடுகள் மாற்றமடையக்கூடியன. ஆனால் தீங்கு விளைவிக்கும் உயர் இரத்த அழுத்தத்திற்கான அடிப்படைக் காரணங்கள் பலவும் இப்பொழுது கண்டறியப்பட்டு வருகின்றன. நடுத்தர மற்றும் வயது முதிர்ந்தோரின் இதயத்தைச் சுற்றியுள்ள இரத்தக் குழாய் உள்ளறைச் சுவர்களில் ஒரு வித அடைப்பு ஏற்படுவதால் இந்நோய் இவர்களை மிகவும் பாதிக்கின்றது. இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களுள் 30 விழுக்காட்டினர் இளம் வயதினர் என்றும், கூடுதலான உப்பைச் சேர்த்துக் கொள்வதால் பாதிக்கப்பட்டோர் 30 விழுக்காட்டினர் என்றும் மருத்துவர்கள் கருதுகின்றனர். நீரிழிவும், இரத்தத்திலுள்ள கொழுப்புச்சத்து அளவும் இதயஞ்சார்ந்த பிற நோய்களுக்கும் உயர் இரத்த அழுத்தத்

திற்கும் காரணங்களாகின்றன. உயர் இரத்த அழுத்தத்தின் அளவு 140/90 என்று கணக்கிடப்பட்டுள்ளது.

உயர் இரத்த அழுத்த நோய் பாதிக்காமல் இருப்பதற்குச் சில வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அதற்கு வாழ்க்கை முறைகளில் சில மாற்றங்களை மேற்கொண்டாக வேண்டும்.

1. எடையைக் குறைத்தல் : இரத்தத்திலுள்ள கொழுப்புச் சத்து இதயத்திற்கு அழுக்கத்தைத் தந்து நேரடியாக இரத்த அழுத்தம் அதிகரிப்பதற்கு காரணமாகின்றது. எனவே வேறு விளைவை உண்டாக்காத வகையில் உடல் எடையைக் குறைத்து இரத்த அழுத்த அளவை இயல்பிற்குக் கொண்டு வர வேண்டும்.

2. நாளும் உடற்பயிற்சி : நாளும் உடற்பயிற்சி செய்வதன் மூலம் அதிகமான இரத்தம் இதயத்திலிருந்து வெளியேற்றப் படுவதால் அழுத்த அளவு குறைகின்றது. இதற்கு ஏற்புடைய பயிற்சி தேவை அரைமணி நேர அளவிற்கு வேகமாக ஓடுதல், நீந்துதல், சைக்கிள் ஓட்டுதல் போன்றவற்றை வாரத்திற்கு மூன்று முதல் நான்கு முறை செய்ய வேண்டும்.

3. உப்பைக் குறைத்தல் : உப்புச்சத்து உடலிலுள்ள திரவப் பகுதியில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. உப்பை உணவில் குறைப்பதன் மூலம், உடலில் திரவப் பகுதி அதிகரிப்பைக் குறைத்து இரத்த அழுத்த அளவையும் குறைக்க முடியும். இதற்குச் சில வழிகளைக் கடைப்பிடிக்கலாம்.

அ. முன்பே உப்பிட்டுச் சமைப்பதையும், சமைத்த பின் உப்பிடு வதையும் தவிர்க்கலாம். கீரை வகைகளைச் சேர்த்துக் கொள்ளலாம்.

ஆ. உப்புச் சேர்த்த பண்டங்களாகிய ஊறுகாய், உருளை போன்றவற்றின் வருவல்களைத் தவிர்க்கலாம்.

இ. பச்சைக் காய்கறிகளை உண்ணக் கற்றுக் கொள்ளலாம்.

ஈ. உப்பில்லாமல் அல்லது உப்பைக் குறைத்து உண்ணுகின்ற புதிய சுவைக்குப் பழக்கப்படுத்திக் கொள்ளலாம்.

4. போதிய சுண்ணாம்புச்சத்து சேர்த்தல் : இச்சத்துக் குறைவு உயர் இரத்த அழுத்தத்திற்குக் காரணமாக உள்ளது என்பதை ஆய்வுகள் கூறுகின்றன. கூடுதலாகக் இதனைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் இரத்த அழுத்த அளவு குறையும். பால் பொருட்கள் சேர்ந்த சமச்சீர் உணவு எடுத்துக் கொள்வதனுடன் சிலருக்கு மாத்திரைகள் உட்கொள்வதன்மூலமும் இந்த உயர் அளவைக் குறைக்க முடியும்.

5. புகைப்பதை விடுதல் : புகைப்பிடிக்கும் பொழுது வெளியேறு இரத்த அழுத்த அளவும் உள்நுழை இரத்த அழுத்த அளவும் உயர்கின்றன. இப்பழக்கத்தைக் கைவிடுவதன் மூலம் 10 புள்ளிகள் வரை இரண்டிலும் உயர் அளவைக் குறைக்கலாம்.

6. பிற மருந்து வகைகளை எச்சரிக்கையாக உட்கொள்ளுதல் : படுக்கும் கட்டுப்பாட்டு மாத்திரைகள் சில பெண்களுக்கு இரத்த அழுத்த அளவில் உயர்வைக் காட்டும். மாத்திரை அளவைக் குறைத்துக் கொள்வதன் மூலம் இப் பிரச்சினையைத் தீர்க்கலாம். ஆனால் சில பேர்களுக்கு மாத்திரைகளை மாற்றிக் கொடுப்பதாலும் இதனைத் தவிர்க்கலாம்.

7. கொழுப்புணவைக் குறைத்தல் : கொழுப்பு நிறைந்த உணவுப் பொருள்களைக் குறைத்துக்கொண்டு, ஆலிவ் எண்ணெய் போன்ற கொழுப்பு குறைக்கப்பட்ட பொருள்களைச் சேர்த்துக் கொள்வதால் வெளியேறும் இரத்த அழுத்த அளவைக் குறைக்க முடியும்.

8. சூழல் நெருக்கத்தைத் தவிர்த்தல் (Avoid Stress) : ஆர்வ உணர்வு இரத்த அழுத்த அளவில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை. ஆனால் ஏமாற்றமும் கோபமுமே மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. அடக்கப்பட்ட உணர்வுகள் (Suppressed emotions) இரத்த அழுத்த அளவைக் கூட்டுகின்றன. வாய்விட்டுச் சிரித்தும் குறைகளை மனம் விட்டுச் சொல்லியும், அழுதும் அவ்வுணர்வுகளை வெளியேற்றுவதன் மூலம் உயர் அளவைக் குறைக்கலாம்.

9. உணர்வு வேகத்தைக் குறைத்தல் (Learn to relax) : உணர்வு வேகத்தைக் குறைக்கும் வழிமுறைகளைக் கற்றுக்கொள்ள வேண்டும். தன்வயப்படுத்தல் போன்ற முறைகளைக் கையாண்டு இரத்த அழுத்த அளவைக் குறைக்கமுடியும். ஆரம்பநிலையில் இதனை நிறுத்தியவுடன் குறைந்த அளவு மீண்டும் அதிகரிக்கக்கூடும். ஆகையால் இவற்றை நாளடைவில் பழக்கத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

எனவே வாழ்க்கை முறையிலும் மாற்றங்களையும், சில வழிமுறைகளையும் மேற்கொண்டு மருத்துவரோடு ஒத்துழைத்தால் இரத்த அழுத்த அளவு குறைந்து உயர்இரத்த அழுத்தம் என்னும் இருதயநோய் நம்மை வந்து பற்றாது என்பதை நன்கு உணரலாம்.

# தமிழ் வழக்கு

திரு. நாராயணையங்கார்

தமிழ்வழக்கு என்பது இங்கு தமிழாகிய வழக்கு என விரியும். வழக்கு எனினும் பாஷை எனினும் ஒக்கும். அது ஒருவன் கருதியபொருளை அறிவுறுக்கும் சொற்றொடர்களின் நிகழ்ச்சியாம். சொற்பொருளொற்றுமைநயத்தால், பொருட்டொடர் நிகழ்ச்சியும் வழக்கெனப்படும். தமிழாகிய சொற்றொடர்களின் நிகழ்ச்சியை (தமிழ்ப்பாஷையை) ஆராய்தலால் இதற்குத் தமிழ் வழக்கு எனப் பெயர்கொடுக்கப்பட்டது.

தமிழ்வழக்கு, உலகவழக்கு செய்யுள்வழக்கு என இருவகைப்படும். உலகவழக்கு - லௌகிகபாஷை. செய்யுள்வழக்கு- காவ்யபாஷை.

உலகவழக்கு செய்யுள் வழக்கு என்னும் அவ்விருவகை வழக்கையும்❉ முதற்பொருளாகவும் அவ்விருவகை வழக்கிற்கும்❉ உறுப்பாயுள்ள எழுத்து, சொல், பொருள் என்னும் இவற்றை அம்முதற் பொருள்களின் சினைப்பொருளாகவும் கொண்டு இலக்கணங்கள் வரையப்பட்டுள்ளன.

இக்கருத்து, தொல்காப்பியப் பாயிரத்துள், "வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி" என்று பன்ம்பாரனாரால் வெளியிடப்பட்டது.

இதன்பொருள் : 'உலகவழக்கு செய்யுள்வழக்கு என்னும் அவ்விரண்டு முதற்பொருள்களுக்குமுரிய சினைப்பொருள்களாகிய எழுத்து, சொல், பொருள் என்னும் இவற்றின் இலக்கணங்களைச் சொல்லவிரும்பி' என்பதாம்.

---

❉ முதற்பொருளாவது : பலசினை (கிளை) களடங்கிய பிண்டமாம். அது பல உறுப்புக்களடங்கிய உடல்போல்வது.

❉ உறுப்பு எனினும் சினை எனினும் அங்கம் எனினும் ஒக்கும்.

இதனுள், உலகவழக்கை வழக்கு என்றும், செய்யுள் வழக்கைச் செய்யுள் என்றும் ❋நாமைகதேசக்கிரகணம் என்னும் நியாயத்தாற் சுருக்கிச்சொல்லலாயிற்று.

''ஆயிருமுதல்'' என அகரச்சுட்டு நீண்டுநின்றது; அவ்விரு முதல் என்றபடி. வழக்கும் செய்யுளுமாயுள்ள அவ் விரண்டினையும் 'முதல்' என்றமையால், அவற்றின் உறுப்பா யுள்ள எழுத்தும் சொல்லும் பொருளும் அம்முதற்பொருளின் இயைபிறிதாகிய சினை எனப் பொருள் கொள்ளக்கிடக்கின்றன.❋

சொற்றொடர்நிகழ்ச்சியால் ஒலிவடிவான பாஷைக்கு எழுத் தும் சொல்லும் ஒளிவடிவால் ஒற்றுமையுடைமையால் அவை அகத்துறுப்பாகிய சினையேயாம்; அவை, ஒருவனுக்குக் கை கால் விரல் உகிர் முதலியனபோல் அங்கமாகவும் உபாங்கமாகவும் ஏற்ற பெற்றி கொள்ளக்கிடங்கும்.

பொருள் ஒன்றுமட்டும் ஒளிவடிவான சொற்றொடரின் வேறாயிருந்தலாற் புறத்துறுப்பாகிய சினையாம்;அது ஒருவனுக்கு ஆடை அணிகலன்கள் போல்வது.

இவ்வாறு ஒருபொருளுக்கு இருவகையுறுப்புக்கள் உண்டு என்பதை, 'புறத்துறுப்பெல்லாம் எவன்செய்யும் யாக்கை-யகத் துறுப்பன்பி லவர்க்கு' என்பதனாலும் அறியலாம்

ஆகவே, பாஷையாகிய சொற்றொடர் நிகழ்ச்சிக்கு எழுத் தொலியும் சொல்லொலியும் அகத்துறுப்பாகிய சினையாகவும் அச்சொற்றொடரொலிகளால் உணர்த்தப்படும் பொருள் புறத் துறுப்பாகிய சினையாகவும் கொள்ளப்பட்டு அவற்றின் இலக்

---

❋ நாமைகதேசக்கிரகணமாவது: ஒரு பொருளுக்குரிய முழுப் பெயரின் ஏகதேசமாகிய ஒரு பகுதியைக்கொண்டு அப் பொருளை வழங்குவது. அதுநரசிங்கப்பிரானைச் சிங்கப் பிரான் எனவும் வீமசேனனை வீமன் எனவும் வழங்குதல் போல இங்கு உலகவழக்கை வழக்கு என்றும், செய்யுள் வழக்கைச் செய்யுள் என்றும் அப்பெயர்களின் நிலைமொழி வருமொழிகளுள் ஒன்று கொண்டு வழங்கியிருப்பது.

❋ இப்பாயிரப்பகுதிக்கு இவ்வாறு பொருள்கொள்ளாத பிறரெல் லாம் வேறுவேறு பொருளுரைத்து இடர்ப்படுப.

கணங்கள் தொல்காப்பியனாரால் ஆராய்ந்து உரைக்கப்பட்டன என்பதாம்.

உலகவழக்கிற்கும் செய்யுள்வழக்கிற்கும் உரிய எழுத்திலக்கணங்கள் எழுத்ததிகாரத்தாலும், அவற்றிற்குரிய சொல்லிலக்கணங்கள் சொல்லதிகாரத்தாலும் ஒருங்கு உரைக்கப்பட்டன; அவற்றுள் உலகவழக்கிலக்கணங்களே பெரும்பான்மையாகவும் செய்யுள் வழக்கிலக்கணங்கள் சிறுபான்மையாகவும் உள்ளன.

உலகவழக்கிற்குரிய பொருள்களெலலாம் கற்றுணரவேண்டாது உலகியலறிவாலே பட்டாங்குணர்த்தும் சொல்லுணர்ச்சி கொண்டே தெள்ளிதின் அறியக்கிடத்தலால் அவற்றை இலக்கணங்கூறியுணர்த்தாது விடுத்துச் செய்யுட்குரிய பொருளிலக்கணங்கள், நாடகவழக்கும் உலகியல்வழக்கும் விரவிய புலனெறி வழக்கிற்குரியவாய் நூலறிவானன்றி உலகியலறிவால் அறிதற் கரியனவாயிருத்தலால் அவையே பெரும்பாலும் பொருளதிகாரத் தாற் சொல்லப்பட்டன.

அவற்றுள் அகத்திணையியல் புறத்திணையியல் களவியல் கற்பியல் பொருளியல் என்னும் இவற்றால் அகப்பொருள் புறப் பொருள் என்னும் இருவகைப்பொருள்பற்றி நிகழும் செய்யுள் வழக்கிற்குரிய பொருளிலக்கணங்க்ள் வரையறுக்கப்பட்டன, இவை செய்யுள் வழக்கிற்குப் புறத்துறுப்பாகிய அங்கங்களாம்.

செய்யுளியலால் அப்பொருள்பற்றிநிகழும் செய்யுட்பகுதிகளெல்லாம் வரையறுக்கப்பட்டு அவற்றின் இலக்கணங்களும் உரைக்கப்பட்டன. இவை செய்யுள் வழக்கிற்கு அங்கமாகிய பொருளின்வாயிலாக உபாங்கங்களாம். இவ் அங்கோபாங்கங்கள் சினையின்பாற்பட்டன.

உவமவியல் மெய்ப்பாட்டியல்களிரண்டும் இருவகைவழக்கிற்கும் பொதுவாய் அப்பொருள்பற்றிநிகழும் தோற்றம், சுவை முதலிய காட்சிக்கும் கருத்துக்கும் இலக்காகும் அப்பொருள்களின் இயல்புகளைப் புலப்படுத்தலால் அவை அப்பொருள்களின்வாயிலாக இருவகைவழக்கிற்கும் உபாங்கமாகிய சினைப்பொருள்களாம்.

மரபியலால் அவ்விருவகை வழக்கினும் வழங்கற்குரிய பொருட்பெயர் முதலான பலவகை இலக்கணங்களும் அவ்வம்

மரபுபற்றியுரைக்கப்பட்டமையால் அவை அப்பொருளின் புறத்துறுப்பாகி உபாங்கம் என்னும் சினைப்பொருளாயின.

இங்ஙனம் உலகவழக்கும் செய்யுள்வழக்குமாகிய தமிழ்ப் பாஷைக்குரிய எழுத்து சொல் பொருள் என்னும் சினைப்பொருள்களைச் சாங்கோபாங்கம் ஆராய்தலால் தொல்காப்பியம் வழக்கு நூல் என்னும் பாஷாசாஸ்திரமாயிற்று.

இதனுட் சொல்லப்படும் களவு கற்பு முதலிய பலவகை ஒழுக்கங்களும் பொருளின்பாற்படும்; அப்பொருள்பற்றிவரும் கூற்று. கிளவி, துறை எனக் பெயர்பெறும் சொற்றொடர்களெல்லாம் செய்யுள்வழக்காகிய காவ்யபாஷை யெனப்படும்.

இவ்வாற்றான் உலகவழக்கும் செய்யுள்வழக்கும் வகுத்துரைக்கும் தொல்காப்பியத்துக்கு வழக்குநூல் என்பது நுவல் பொருள் பற்றியபெயராயிற்று.

இங்ஙனங்கொள்ளுதலால் தொல்காப்பியம், வழக்கு(பாஷை) என்னும் ஒருபொருணுதலிவரும் மூன்றுறுப்படக்கிய பிண்டமாய் ஒருநூலாயிற்று.

இங்ஙனங் கூறியவாற்றால் தமிழ்வழக்கிற்குரிய பிரமாணம் தொல்காப்பியம் என்பதும் பாஷைக்கு வழக்கு என ஒருபொதுப் பெயர் உண்டென்பதும் நிரூபிக்கலாயிற்று.

---

குறிப்பு : இக்கட்டுரை 1918 நவம்பர் — திசம்பர் இதழில் வெளி வந்தது. (தொகுதி 12, பகுதி 1)




இந்நூற்றாண்டின் தொடக்கம் முதல் தமிழ் இலக்கிய நலனிலும், தமிழ் வளர்ச்சியிலும் நாட்டம் கொண்டு, மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் 'செந்தமிழ்' இதழைப் பாராட்டி, 'பழந்தமிழ் ஆர்வலர்' என வழங்கும் கேடயத்தையும் சான்றிதழையும் மாண்புமிகு கல்வியமைச்சர் முனைவர். செ. அரங்கநாயகம் அவர்களிடமிருந்து மதுரை நற்றமிழ்ச் சங்கச் செயலாளர் திரு. மா. தனுக்கோடி பாண்டியன் அவர்கள் மதுரையில் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாக 21-3-93 அன்று நடந்த தமிழ் ஆட்சிமொழிக் கருத்தரங்கின் பொழுது பெறுகிறார்.

# சிந்தனைக்குச் சில குறட்பாக்கள்

— பேரறிஞர் நா. பாலுசாமி

திருவள்ளுவர் ஒரு பல்கலைக்குரிசில்; அவர் அருளிய திருக்குறள் ஒரு வாழ்க்கை நூல். மானுடப் பிறவி எடுத்த ஒருவன் அல்லது ஒருத்தி வாழ்வாங்கு வாழ்வதன் வாயிலாகத் தெய்வத் தன்மை அடையலாம் என்று கூறுகிறார் திருவள்ளுவர். அவர் அருளிய 1330 அரிய குறட்பாக்களும் சிந்தனைக்கும் செயலுக்கும் உரியவை. அவற்றுள்ளும் ஒரு சில குறட்பாக்களைத் தெரிவு செய்து அவற்றின் நுட்ப திட்பங்களை விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கம்.

குறட்பாக்கள் சில சொற்களில் பல பொருள்களை உணர்த்தும் வகையில் செறிவானவை. பழைய உரைகாரர் பலரும் தத்தம் அறிவின் திறத்தால் பொருள் விரித்திருந்தாலும், இன்றளவும் திருவள்ளுவரின் உள்ளக் கிடக்கையை உள்ளவாறு உணர்ந்து கொள்வது இயலாததாகிறது. 'தொட்டனைத் தூறும் மணற்கேணி போன்று' கற்றனைத் தூறி வற்றாது மேலும் சுரக்கும் பொருள் ஆழம் உடையவை குறட்பாக்கள். ஒவ்வொரு குறட்பாவும் சிந்திக்கும் தொறும் புதிய புதிய கருத்துக்களைத் தரவல்லது. திருவள்ளுவர் இங்ஙனம்தான் நினைத்திருப்பார் என்று எத்துணை ஆராய்ச்சியாளராலும் அறுதியிட்டு உறுதியாக் கூற முடியாத அளவுக்கு அவரது சிந்தனை ஆழமுடையது. இதனாலன்றோ,

'பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறும் சேரச் — சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்'

என்று அரிசில்கிழார் என்ற பழம் புலவர் மகிழ்ந்து பாராட்டுவாரானார்! மாங்குடி மருதனார் என்ற மற்றொரு சங்கப்புலவர் 'ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாகி' என்று வியப்பதும் அது நோக்கியன்றோ!

வாழ்வியல் அறங்கள் கூறவந்த திருவள்ளுவர் வாழ்வின் பல்வேறு துறைகளாகிய அரசியல், பொருளியல், குடியியல், பண்பியல் முதலிய செய்திகளைத் திருக்குறளில் விவரித்துள்ளர். குறட்பாக்கள் பொதுவாகத் தெளிவாகவும் செம்பாகமாகவும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளன வெனினும், சில குறட்பாக்கள் முடிவற்ற ஆராய்ச்சிக்கு இடந்தருவனவாகும். அவற்றுள் சில குறட்பாக்களின் நேரான பொருளினைக் காண முயல்கிறது இக்கட்டுரை

கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்தில் உள்ள முதற் குறட்பா சிந்திக்கத்தக்கது.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

என்பது முதற்குறள். இதில் வரும் அகரம், எழுத்தெல்லாம், ஆதிபகவன் ஆகிய தொடர்கள் ஆழ்ந்து சிந்திக்கத்தகும். இக் குறளுக்குப் பரிமேலழகர் உரை வருமாறு: 'எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய முதலை உடையன; அதுபோல உலகும் ஆதிபகவனாகிய முதலையுடைத்து, மேலும் அவர், 'அகரத் திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும் ஆதிபகவற்குத் தலைமை செயற்கை யுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றும் உணர்தலானும் கொள்க. தமிழ் எழுத்திற்கேயன்றி வடவெழுத்திற்கும் முதலாதல் நோக்கி 'எழுத்தெல்லாம்' என்றார். ஆதிபகவன் என்னும் இரு பெயரெட்டுப் பண்புத்தொகை வடநூன் முடிபு ''

மேலே கண்ட பரிமேலழகர் உரையில் 'அகரம்' என்பது அ என்ற வரிவடிவத்தையும் 'எழுத்தெல்லாம்' என்பது தமிழ், வடமொழி ஆகிய இருமொழிகளையும் குறிப்பதாகும். அவ்வாறே பரிமேலழகர் கருதியுள்ளார். மணக்குடவரும் பரிமேலழகரைச் சார்ந்தே உரைத்துப் போந்தார். இனி உயிரெழுத்துப் பன்னிரண்டுக்கும் அகரம் முதலெழுத்தாதல் முறைமைபோல' என்றார் பரிதியார். இப்பழைய உரைகளை நோக்கின் திருவள்ளுவரது சிந்தனை அவ்வாறு இருந்திருத்தல் இயலாது எனத் தோன்றுகிறது. இது குன்றக்கூறல் என்னும் குற்றத்தின்பாற்படுவதாகும். ஆழ்ந்து சிந்திப்பின் 'அ' என்பது வரிவடிவத்தைக் குறிக்காமல் 'ஒலி' வடிவத்தைக் குறிப்பதாகக் கொள்ளல் நேரிதாகத் தோன்றுகிறது. இங்ஙனம் ஒலியாகக்

கொண்டால் உலகில் உள்ள அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி விடமுடியும். அஃதாவது அகர ஒலி என்பது தமிழுக்கும் வடவெழுத்திற்கும் மட்டுமன்றி எல்லா மொழிகளுக்கும் ஆதி ஒலியே 'அகரம்' என்று கொள்ளுதல் வேண்டும். எங்ஙனமெனின், மனிதன் வாயைத் திறந்தவுடன் முதன்முதல் எழுவதே 'அ' என்னும் ஒலி'. வாயைத் திறந்து முயற்சி செய்யின் உலகில் எம்மொழி பேசுவோனாக இருந்தாலும் 'அ' என்னும் ஒலியே பிறக்கும். எழுத்துக்களின் பிறப்புப்பற்றிப் பேசும் தொல்காப்பியர் இவ்வுண்மையைப் பொதுவாக 'அ, ஆ ஆயிரண்டும் அங்காந்து இயலும் — (தொல். எழுத். 153) என்றார்; அங்காத்தல் வாயைத் திறத்தல் எனப்பொருள்படும். மனிதர்களே அன்றி விலங்குகளும் வாயைத்திறந்து ஒலி எழுப்புமேல் முதலில் 'அ' என்ற ஒலிதான் பிறக்கும். எனவே, எழுத்தெல்லாம் என்ற தொடருக்கு உலகமொழி எழுத்துக்கள் எல்லாவற்றிற்கும்' என்று பொருள் கொள்வதும், 'அ' என்பதற்கு வரிவடிவம் கொள்ளாது ஒலிவடிவம் கொள்வதும் இத்திருக்குறளுக்கு நேரிய பொருள் காண்பதாகும்.

இனி 'ஆதிபகவன்' என்ற தொடரைப் பரிமேலழகர் இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகக் கொண்டு 'ஆதிப் பகவன்' என பகரஒற்றின்றியிருத்தலின் இது வடநூன்முடிபு என்பர் அஃதாவது 'ஆதி' என்னும் தமிழ்ச்சொல்லும் 'பகவன்' என்றும் வடசொல்லும் புணர்தலின் பகவரவொற்று மிகாதாயிற்று எனக்கொண்டு விளக்கம் தந்துள்ளார் பரிமேலழகர் நன்கு சிந்திப்பின் ஆதி, பகவன் ஆகிய இரு சொற்களுமே தமிழ்ச் சொற்கள் என்பது புலப்படும். 'பகு' என்ற தமிழ் அடிச்சொல்லடியாகப் பிறந்ததே பகவன் என்பது, 'எட்பகவன்ன' என்ற சொல்லாட்சியை நோக்குக (குறள்.889). எனவே, ஆதிபகவன் என்பது ஆதியாகிய பகவன் எனப் பொருள்பட்டு வழங்கும் தனித்தமிழ்த் தொடரேயாகும். இத்தொடரில் ஒற்று மிகத் தேவையின்று, தொல்காப்பியர்,

> "உயிரீறு ஆகிய உயர்திணைப் பெயரும்
> புள்ளியிறுதி உயர்திணைப் பெயரும்
> எல்லா வழியும் இயல்பென மொழிப"

என்பர் (தொல். எழுத். 153). ஆதி — ஆதியானவன்; பகவன் — உயிர்களின் வினைக்கேற்பப் பகுத்தளிப்பவன். இரண்டுமே

உயர்திணைப் பெயர்களாகும். இதுகாறும் கூறியவற்றால் இம் முதற்குறட்பாவிற்குப் பின்வருமாறு பொருள் காண்பதே நேரிது எனத் தோன்றுகிறது. ''உலகமொழிகள் எல்லாவற்றிலும் உள்வ எழுத்தொலிகளுக்கெல்லாம் முதன்மையானதும் அடிப்படை யானது மாகிய ஒலி 'அ' என்பதாகும். அதுபோல, உலகத்திற்கு (எல்லா உயிர்களுக்கும்) முதலானவன் ஆதிபகவனாகிய இறைவன் ஆவான்''. அன்றியும் இயல்பான அகரவொலிக்குப் பிறிதோர் ஒலி முதலாகாததுபோல, ஆதி முதலாகிய இறைவனுக் கும் பிறிதொன்று ஆதியாதல் இல்லைஎன்பதும் உணரத்தகும்.

அடுத்துச் சிந்தனைக்குரிய குறட்பா அதே கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தில் அமைந்துள்ள

'கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை'

என்பதாகும் இக்குறட்பாவில் ஆய்வுக்குரியது எண்குணத் தான் என்னும் தொடராகும். இதற்குப் பரிமேலழகர், 'எண் வகைப்பட்ட குணங்களை உடையானது தாள்களை வணங்காத் தலைகள்' என்று பொருள் விரித்துரைப்பார். மேலும் அவர், எண்குணங்களாவன : தன்வயத்தனாதல், தூயவுடம் பினனாதல் இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என இவை' என்று விளக்கமும் தருவாரா யினர். இக்குணங்கள் சைவாகமத்துள் கூறப்பட்டவை என்றும் அவர் ஆதாரம் காட்டிச் செல்வர். பரிமேலழகரது இவ்வுரை விரிப்பு திருவளுவரின் உள்ளத்தை உள்ளவாறு வெளிப்படுத்து வதாக இல்லை என்றே தோன்றுகிறது. இவ்விளக்கம் இருவகை யான நலிவு மெலிவுகளை உடையது. ஒன்று, திருவள்ளுவர் மேலே கூறிய குணவிசேடங்கள் இறைவனுக்குரியவை என்பதை வேறு எங்கும் நூலுள் குறிப்பிட்டாரல்லர். அன்றியும் அளவிடற் பாலதாகிய குணங்களின் இருப்பிடமாகக் கருதப்படவேண்டிய இறைவனை இவ்வெட்டனுள் மட்டில் அடக்குதல் பொருந்தாது. மற்றொன்று, இது சைவ ஆகமத்துள் கூறப்பட்டுள்ளது எனின், அது இந்நூலினது சமயப் பொதுமைக்கு இழுக்காகமுடியும். மேலும், பரிதியார் என்ற மற்றொரு பழைய உரைகாரர் வேறு வகையான எட்டுகுணங்களைக் கட்டுரைத்துள்ளார். இங்ஙனம் ஒவ்வொருவரும் வெவ்வேறு எண்குணங்களைக் கூறின், அதற்கு

வரம்பில்லாது போகும். பரிதியார் கூறும் எட்டுக் குணங்களாவன : அனந்த ஞானம், அனந்த வீரியம், அனந்த குணம், அனந்த தெரிசனம், நாமமின்மை, கோத்திரமின்மை, அவாவின்மை, அழியாவியல்பு என்பனவாம். இவ்வுரை எத்துணைப் பொருத்தமற்றது என்பது வெளிப்படை. மணக்குடவரும் எண்குணத்தான் என்பதற்கு எட்டுக்குணங்களையுடையவன் என்றே பொருள் கொண்டார். ஆயின் அவர் அவைற்றை விரித்திலர். காளிங்கரும் அவ்வாறே எட்டு எனப்பொருள் கொண்டார்.

இப்பழைய உரைகாரர் எல்லோரும் எண் என்பதற்கு எட்டு என்று பொருள் கொண்டதே அவர்களின் உரைமெலிவிற்குக் காரணம். எண் என்பதற்கு எண்ணத்தக்க என்றும் சிலர் பொருள் விரிப்பர். இஃது ஓரளவு பொருந்துமாயினும், வன்மையுடையதாகாது.

இனி இத்தொடருக்கு எட்டு என்று எண்ணிக்கைப்பொருள் கொள்ளவேண்டும் என்று கருதினால், ஒருகால் பின் வருமாறு பொருள் கொள்ளக் கடவுள் வாழ்த்து அதிகாரமே இடம் தருகிறது. இது ஒரு புதிய உரை அணுகுமுறையாகும். எண் குணத்தான்' என்ற தொடர் வரும் குறட்பா கடவுள் வாழ்த்து அதிகாரத்துள் ஒன்பதாவதாகும். அக்குறளுக்கு முன் உள்ள எட்டுக்குறள்களில் எண் வகையான இயல்புகள் இறைவனுக்குக் கூறப்படுகின்றன. அவை : உலக முதலாதல், வாலறிவு, மலர்மிசை ஏகுதல், வேண்டுதல் வேண்டாமை இலாமை, இருவினையும் சேராமை, ஐந்தவித்தல், தனக்குவமையிலாமை, அறவாழி ஆதல் என்பனவாகும். இவ்வுரை பொருத்தமுடையதே. ஆயின் இதனை ஏற்பின் திருவள்ளுவரே அதிகாரம் வகுத்தாரென்றும், அதிகாரத்துள் குறட்பாக்களை இன்னதன்பின் இன்னது என்னும் வைப்புமுறை செய்தாரென்றும் கொள்ள நேரிடும். ஆயின் இஃது உண்மையன்று. ஒவ்வோர் உரைகாரரும் குறட்பாக்களின் முறை வைப்பை மாற்றியுள்ளனர். இக்காரணத்தால் இவ்வுரையும் மெலிவுரையாகிறது. இனித் திருவள்ளுவர் தமது நூலுள் 'எண்' என்பதனை எத்தனை இடங்களில், எவ்வெப் பொருளில் ஆண்டுள்ளார் என்று நோக்குவது பயனுடையதாகும்.

1) எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு

உ॥ எண் சேர்ந்த நெஞ்சத்து இடனுடையார்க்கு எஞ்ஞான்றும்
பெண் சேர்ந்தாம் பேதைமை இல்.

இவ்விரு குறள்களில் முதல் குறளில் எண் என்பது கணிதம் என்ற பொருளிலும், பின்னதில் நினைத்தல் அல்லது எண்ணுதல் என்ற பொருளிலும் ஆளப்பட்டுள்ளன. என்பது தெளிவு. இனிப் பின் வரும் குறட்பாக்களை நோக்குவாம்.

(1) எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார் மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு

(2) எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பத்தான் தானே கெடும்

(3) எண் பொருள வாகச் செலச்சொல்லித்தான் பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

இக்குறட்பாக்களுள் எண்பதம் என்பதற்கு எளிய செவ்வி என்றே பரிமேலழகர் பொருள் கொண்டார். அதுபோன்றே எண்பொருள என்பதற்கும் எளிமையாக என்று பொருள் கண்டுள்ளார். இவ்வாற்றால் திருவள்ளுவர் எண் என்பதற்கு எண்ணிக்கை, எண்ணுதல் அல்லது நினைத்தல், எளிமை எளிய செவ்வி என்று வெவ்வேறு வகையான பொருள்கள் கொண்டுள்ளார் என்பது தேற்றம். இறைவன் அளவிடற்கரிய குணக் குன்றாவான். குறிப்பிட்ட எட்டு குணங்களுள் அடங்குபவன் அல்லன். இறைவன்பால் உண்மையான அன்பு வைத்தவர்களுக்குத் தானே மேலிருந்து கீழே இறங்கி வந்து எளிமைகாட்டி (எளிவந்தசெம்மை) அருள்பாலிப்பவன் என்று பொருள் கொள்வதேச் சாலசிறந்ததாகத் தோன்றுகிறது. இதனை வைணவர்களும் சைவர்களும் 'சௌலப்பியம்' (எளியனர்ந்தமை) என்று கூறுவர். இது பொதுவாக அனைத்துச்சமயத்தவரும் ஏற்றுக்கொள்ளத் தக்கதேயாம். திருமுருகாற்றுப்படையுள் முருகனே இரவலனிடம் ஆற்றுப்படுத்தப்படுதல் காண்க. அடியவர் இடர்தீர்க்க இறைவன் உரிய காலத்தில் ஓடோடியும் இறங்கி வந்து எளிமையாகக் காட்சியளித்தல் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு கருத்தாகும். அறிஞர் மேலும் ஓர்வாராக.

அடுத்து அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரத்துள் வரும்,

'அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை'

என்னும் குறட்பா சிந்திக்கத்தகும். இதற்கு அறிஞர் பலரும் பலவாறு பொருள் கண்டுள்ளனர். ஆயின் இன்றளவும் திருவள்ளுவர் எப்பொருளில் இக்குறளை அமைத்தார் என்பது புரியாத புதிராகவே உள்ளது. பழைய உரைகாரரும் திருவள்ளுவர் கருத்திற்கேற்ப உரைகண்டனரா என்பதிலும் ஐயம் தோன்றுகிறது. இக்குறளுக்குப் பரிமேலழகர் பின்வருமாறு உரைகூறுவர் : ''அறத்தின் பயன் இதுவென்று யாம் ஆகம அளவையான் உணர்த்தல் வேண்டா; சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடைக் காட்சியளவை தன்னானே உணரப்படும்'' மணக்குடவர், பரிதியார், காளிங்கர் போன்றோரும் இங்ஙனமே பரிமேலழகர் உரையை ஏற்பாராயினர். இதன்பொருள் விளக்கம் நெடிய சிந்தனைக்குரியது. பரிமேலழகர் உரையில் 'ஆறு' என்பது 'பயன்' என்னும் பொருளில் பயன் படுத்தப்பட்டுள்ளது. ஆனால் மணக்குடவரும் காளிங்கரும் 'ஆறு' என்பதற்கு 'நெறி' என்று பொருள் கொண்டனர்.

இக்குறளுக்குச் சிலர், பல்லக்கைச் சுமப்பவனும் அதன் மேலிருந்து ஊர்ந்து செல்வோனுமாகிய அவர்களிடையே அறத்தின் பயன் இஃது எனக் கூறவேண்டா என எதிர்மறைப் பொருள்பட விளக்குவாராயினர். அறம் கூறவந்த திருவள்ளுவர் இதுபோன்று தமது நூலுள் வேறு எங்கும் எதிர்மறை முகமாக அறத்திற்கு விளக்கம் தந்திலர் என்பது நோக்கத்தகும். அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரத்தில் உள்ள பத்து குறட்பாக் களுள் 1 2,3,6,8,9,10 ஆகிய ஏழுகுறள்களில் பொதுவாக அறம் செய்க என்று வலியுறுத்துகிறாரேயன்றி, இதுதான் அறநெறி அல்லது அறத்தின் பயன் என்று உணர்த்தினாரல்லர். குறள்கள் 3,5ஆகிய இரண்டும் மனமாசின்மை, அழுக்காறின்மை, அவாவின்மை, வெகுளியின்மை, இன்னாச் சொற் கூறாமை முதலியவற்றையே அறம் என்று கூறுகின்றன. இவை அறத்தின் பயனை' உணர்த்தமுடியவில்லை. ஏழாம் குறளாகிய 'அறுத்தாறு 'இதுவென வேண்டா' எனத் தொடங்கும் ஒன்றுதான் ஓரளவு அறநெறி எது என்பதனை விளக்குகிறது. பழைய உரைகளை ஏற்போமாயின், 'உல்லாசமாக ஒருவன் பல்லக்கில் உட்கார்ந்து கொண்டு கீழ்மைப்படுத்தும் நோக்கத்துடன் மற்றொருவனைத் தூக்கச்செய்வது என்பது இதன் பொருளாக அமையும்.